# பாட்டாளி சிந்தனை

Volume 28 No. 7

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**SUCI (Communist)**

March 2018

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5




மே 5, 1818
மார்ச் 14, 1883

## காரல் மார்க்ஸ் நீடூழி வாழ்க!

“ஒவ்வொரு சகாப்தத்திலும் ஆளுகின்ற வர்க்கத்தின் கருத்துக்கள் யாவும் ஆளுகின்ற கருத்துக்களாகவே இருக்கின்றன, அதாவது சமுதாயத்தின் ஆளுகின்ற பொருளாதய சக்திகளான வர்க்கம் என்பது, அதே நேரத்தில் அதன் ஆளுகின்ற அறிவுசார் சக்திகளாக இருக்கின்றது. பொருளாதய உற்பத்திக்கான சாதனங்களை தன் வசம் கொண்டிருக்கும் வர்க்கமானது அதே நேரத்தில் சிந்தனை உற்பத்திக்கான சாதனங்களையும் தன் கட்டுபாட்டிற்குள் கொண்டிருக்கிறது. ஆக பொதுவாகப் பேசுகையில், அதன் மூலம், அறிவுசார் உற்பத்தி சாதனங்களைக் கொண்டிராதவர்களின் கருத்துக்கள் அடிபணிதலுக்கு உட்படுத்தப்படுகின்றது.”

*(ஆதாரம் : ஜெர்மன் சித்தாந்தம்)*



டிசம்பர் 21, 1879
மார்ச் 5, 1953

## ஸ்டாலின் நீடூழி வாழ்க!

“ . . . மக்கள் தங்கள் விருப்பத்திற்கேற்றபடியான கற்பனைத் தூண்டல்களால் சரித்திரம் படைப்பதில்லை. ஒவ்வொரு புதிய தலைமுறையும், அத்தலைமுறை உதிக்கும்போது ஏற்கனவே நிலவுகின்ற, தயாராயிருக்கின்ற நிச்சயமான நிலைமைகளை எதிர்கொள்கின்றது. அந்நிலைமைகளை சரியாக புரிந்துகொள்ளுமளவிற்கும் அந்நிலைமைகளை எப்படி மாற்றுவது என்பதை புரிந்து கொள்ளுமளவிற்கும் மட்டுமே மாமனிதர்களின் மதிப்பு அளவிடப்படமுடியும். மக்களையும் நிலைமைகளையும் எதிரெதிரானதாக எடைபோடக் கூடாது என்பதுதான் மிகத் துல்லியமாக மார்க்ஸின் கருத்தாகும். மக்கள்தான் வரலாறு படைக்கின்றனர். ஆனால் நிலைமைகளை எந்தளவு சரியாக புரிந்து கொள்கின்றனரோ, நிலைமைகளை எவ்வாறு மாற்றுவதென்பதை எந்தளவு புரிந்து கொள்கின்றனரோ அந்தளவே அவர்களால் படைக்கமுடியும். குறைந்த பட்சம், இப்படித்தான் இரஷ்ய போல்ஷ்விக்குகளாகிய நாங்கள் மார்க்ஸை புரிந்துகொள்கிறோம்.”

*(ஜெர்மன் ஆசிரியர் எமில் லுத்விக்குடனான உரையாடலிலிருந்து, டிசம்பர் 13, 1931)*

### உச்சநீதிமன்றத்தின் நான்கு நீதிபதிகளின் பேட்டி

# நீதித்துறையின் சுதந்திரமும் பாரபட்சமின்மையும் கடுமையான தாக்குதலுக்குள்ளாகியிருப்பதைக் காட்டுகிறது

அரசாங்கத்தையும் நாட்டின் நீதித்துறையையும் அரசியல் வட்டாரங்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையில் இதுவரை கண்டிராத வகையில் கடந்த ஜனவரி 12 அன்று உச்ச நீதிமன்றத்தின் நான்கு மூத்த நீதிபதிகள் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் நீதி நிர்வாகத்தை சிறுமைப்படுத்தும் வகையில் ‘பல விரும்பத்தகாத’ நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா மீதே குற்றச்சாட்டை முன்வைத்தனர். ‘வழக்குகளை விசாரணை செய்ய உரிய பெஞ்சுக்கு அனுப்புவதில் விதிகளை முறையாகக் கடைபிடிக்கவில்லை’ என்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மீது குற்றம் சாட்டிய அவர்கள், தேசத்திற்கு மிகப்பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும் வழக்குகளை தான் விரும்பும் ‘சில குறிப்பிட்ட’ ஜூனியர் நீதிபதிகளுக்கு வழங்குவதாகவும் குற்றம் சாட்டினர். இந்தக் குற்றச்சாட்டுகள் நாடுமுழுவதிலுமுள்ள சாமானிய மக்களிடமும்கூட அதிர்வலைகளை உருவாக்கியது. இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையாக இருந்தால், இந்த நான்கு நீதிபதிகள் கூறியதைப்போன்று நாட்டின் உயர்ந்த நீதிமன்றத்தின் நம்பகத்தன்மையின் மீதே ‘சந்தேகத்தை’ ஏற்படுத்துவதோடு நீதிவழங்குவதின் எதிர்காலத்தையே இது கேள்விக்குறியாக்கிடும் என்று மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

### அதிருப்தியடைந்த நீதிபதிகள் ஜனநாயகத்தின் எதிர்காலம் குறித்த கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்

இரண்டு மாதங்களுக்கு முன்பு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு தாங்கள் எழுதிய கடிதத்தில் பல்வேறு முக்கிய பிரச்சினைகள் குறித்து தங்களது கவலைகளைத் தெரிவித்ததாக இந் நீதிபதிகள் கூறியுள்ளனர். ஆனால் ‘இந்த அமைப்பைப் பாதுகாப்பதற்கான நிவாரண நடவடிக்கையை’ மேற்கொள்ள தலைமை நீதிபதியை சம்மதிக்க வைக்க தங்களால் முடியவில்லை என்று தெரிவித்துள்ளனர். பதில் கொடுக்கப்படாத அந்தக் கடிதத்தையும் பத்திரிகையாளர் சந்திப்பில் அவர்கள் வெளியிட்டனர், அதோடு ‘இந்த அமைப்பு பாதுகாக்கப்பட்டாலொழிய ... நாட்டில் ஜனநாயகம் இருக்காது’ என்று எச்சரித்த அவர்கள் ‘ஜனநாயகத்தின் தனித்தன்மையே (Hallmark) சுதந்திரமும் பாரபட்சமற்ற நீதிபதிகளும்தான்’ என்றும் அவர்கள் கூறினர். குறிப்பாக பாஜக தலைவர் அமித் ஷாவை பிரதான குற்றவாளியாக முதலில் சேர்க்கப்பட்ட சொராபுதீன் ஷேக் என்கவுண்டர் வழக்கை விசாரித்துக்கொண்டிருந்த சிறப்பு சிபிஐ நீதிபதி பிரிஜ்கோபால் ஹர்கிஷன் லோயா 1 டிசம்பர் 2014 அன்று மர்மமான முறையில் மரணமடைந்த வழக்கை விசாரிப்பதற்காக வழங்கப்பட்ட அமர்வின் மீது தாங்கள் அதிருப்தியடைந்துள்ளனரா என்ற கேள்விக்கு அவர்கள் ‘ஆம்’ என்று பதிலளித்தனர். ‘நீதிபதி லோயாவின் மரணம் குறித்து விசாரிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கை ரத்து செய்யவேண்டும்’ ஏனென்றால் இது பம்பாய் உயர்நீதிமன்றத்தில் பம்பாய் வழக்கறிஞர்கள் ஏற்கனவே தொடர்ந்துள்ள வழக்கு விசாரணையை தடுத்துவிடும் என்று தலைமை நீதிபதிக்கு தாங்கள் எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளதாக நான்கு நீதிபதிகளும் ஒப்புக்கொண்டனர். இந்த வழக்கின் வீரியத்தைப் புரிந்துகொள்வதற்காக நீதிபதி லோயா மரணத்தில் உள்ள சில பின்னணிகளை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

சொராபுதீன் என்கவுண்டர் வழக்கில் சிபிஐ நீதிமன்றத்தில் தொடர்ந்து ஆஜராகாமல் விலக்கு கேட்டதற்காக அமித் ஷாவைக் கண்டித்த நீதிபதி ஜே டி உட்பத் சில வாரங்களுக்குள்ளேயே மாற்றப்பட்டதைத் தொடர்ந்துதான் ஜூன் 2014இல் மும்பை சிபிஐ சிறப்பு நீதிமன்றத்தில் இந்த வழக்கை விசாரிக்க நீதிபதி பி ஹெச் லோயா நியமிக்கப்பட்டார். லோயா மரணமடைந்தவுடன் தொடக்கத்தில் அவரது குடும்ப உறுப்பினர்கள் அவரது மரணத்தின் பின்னணியில் சந்தேகம் எழுப்பினர், அமித் ஷாவுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கினால் ரூ100 கோடி வழங்கப்படும் என அவரது மரணத்திற்கு சில நாட்களுக்கு முன்புதான் பாம்பே உயர்நீதிமன்றத்தின் அப்போதைய தலைமை நீதிபதி அவரிடம் கூறியதாக பத்திரிகைகளிடம் தெரிவித்தனர். ஆனால் அதற்கு லோயா மறுத்துவிட்டதோடு தொடர்ந்து வழக்கை விசாரித்துள்ளார். லோயாவின் மரணத்திற்கு பின்பு அவ்வழக்கின் நீதிபதியாக எம் பி கொசாவி நியமிக்கப்பட்டார். அவர் சிபிஐ வழக்கின் பின்னணியில் அரசியல் நோக்கங்கள் இருப்பதாகக் கூறி 30 டிசம்பர் 2014இல் அமித் ஷாவை விடுதலை செய்தார். (ஆதாரம்: websites: caravanmagazine.in; thewire.in; scroll.in — between 21 November and 23 November 2017). டில்லியில் கடந்த 13 ஜனவரி 2018 அன்று பத்திரிகையாளர்களிடம் பேசிய நீதிபதி லோயாவின் மகன் தனது தந்தையின் மரணத்தில் தவறேதும் நடக்கவில்லை என்று கூறியுள்ளார். லோயாவின் மகனுடன் அமர்ந்திருந்த லோயாவுடன் முன்பு பணியாற்றியவர் இந்த பேட்டி அமித் ஷாவின் முன்முயற்சியில் நடைபெறுகிறது என்றார். இந்த பத்திரிகையாளர் சந்திப்பில் லோயாவின் மகனுடன் அமர்ந்திருந்த வழக்கறிஞர் அமித் நாயக்தான் பல கேள்விகளுக்கு பதிலளித்தாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இறுதியில், வழக்கை விசாரித்துவந்த இரண்டு நீதிபதிகள் கொண்ட பெஞ்சில் உறுப்பினராக இருந்த பாஜகவோடு நெருங்கிய தொடர்புடையவர் என்று மூத்த வழக்கறிஞரால் குற்றம்சாட்டப்பட்ட நீதிபதி அருண் மிஸ்ரா இவ்வழக்கிலிருந்து விலகிக்கொண்டார். அதோடு நீதிபதி லோயா மரணம் தொடர்பாக சுதந்திரமான விசாரணை வேண்டும் என்று கோரி தொடரப்பட்ட இரண்டு பொதுநல வழக்குகள் நீக்கப்பட்டு தற்போது அவை தலைமைநீதிபதியின் தலைமையிலான மூன்று நீதிபதிகள் பெஞ்சால் விசாரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எது எப்படியோ, நீதிபதி லோயாவின் மரணத்திலும், சொராபுதீன் என்கவுண்டர் வழக்கிலும் சர்ச்சை இன்னமும் தொடர்கிறது. இதை தங்களது குற்றச்சாட்டில் நான்கு நீதிபதிகளும் தெரிவித்ததில் எந்த வியப்பும் இல்லை.

உச்சநீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும் கொலீஜியத்தில் உறுப்பினர்களாக உள்ள உச்ச நீதிமன்றத்தலைமை நீதிபதிக்கும் அவருக்கு

தொடர்ச்சி 2ம் பக்கம்

## உச்சநீதிமன்றத்தின் நான்கு நீதிபதிகளின் பேட்டி

# “நீதித்துறையும் தற்போது ஊழலாகிவிட்டது என நாம் கூற வேண்டியதிருக்கிறது”

1ம் பக்கத் தொடர்ச்சி

அடுத்தபடியாக உள்ள நான்கு நீதிபதிகளுக்கும் இடையே மோதல் இருப்பதை அம்பலப்படுத்தியுள்ள இந்த பத்திரிகையாளர் சந்திப்பு மிகுந்த முக்கியத்துவத்தை பெற்றது. ‘நீதிபதிகளை நீதிபதிகளே நியமிக்கும் கொலீஜியம் அமைப்பே’ ‘ஒரு தனிக் கும்பல்’ போல் செயல்படுகிறது என்பதும் அதிருப்தி நீதிபதிகளின் குற்றச்சாட்டில் ஒன்றாகும்.

பத்திரிகையாளர் சந்திப்பும் அதில் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகளும் ஒரு மிகப்பெரிய சர்ச்சையை இயற்கையாகவே கிளப்பிவிட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகள் அனைவரையும் சந்திப்பதற்கும் இந்த ‘நெருக்கடிக்கு’ மத்தியஸ்தம் செய்வதற்காகவும் 7 பேர் கொண்ட குழுவை பார் கவுன்சில் ஆஃப் இந்தியா அமைத்தது. எந்த நெருக்கடியும் இல்லை எனவே வெளியிலிருந்து எந்தத் தலையீடும் தேவையில்லை என்று நான்கு நீதிபதிகளும் தெரிவித்தனர். கொலீஜியத்தில் நிலவும் மோதல் குறித்து ‘ஆழ்ந்த கவலை’ தெரிவித்துள்ள உச்சநீதிமன்ற பார் அசோசியேஷன் உடனடியாக அது தீர்க்கப்படவேண்டும் என்றும் கோரிக்கை வைத்தது. பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தியது தவறான முன்னுதாரணம் என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் சிலர் கூறியதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. சில குறிப்பிடத்தக்க சம்பவங்களும் நடந்தன.

பிரதமர் நரேந்திர மோடியின் முதன்மைச் செயலாளர் ஜனவரி 13 அன்று டெல்லியில் உள்ள உச்சநீதிமன்றத் தலைமைநீதிபதியின் வீட்டு முன்பு இருந்ததை சில தொலைக்காட்சிகள் எடுத்துக் காட்டின. பிரதான பாராளுமன்றவாத எதிர்க் கட்சியான காங்கிரஸ் இந்த வாய்ப்பைப் பயன் படுத்துவது வெளிப்படையாகத் தெரிந்தது. பாஜகவின் மத்தியத் தலைமை மௌனம் சாதித்தது, ஆனால் பாஜக தலைவர் யஷ்வந்த் சின்ஹா 4 நீதிபதிகளுக்கு தனது ஆதரவைத் தெரிவித்ததோடு அவர்கள் எழுப்பிய பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்துமாறு மத்திய அமைச்சர்களைக் கேட்டுக்கொண்டார். உத்திரப்பிரதேச மருத்துவக் கல்லூரியோடு தொடர்புடைய ‘மருத்துவ ஊழல்’ வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றிட தலைமை நீதிபதி மறுப்புத் தெரிவித்தது உள்ளிட்ட ‘மிக மோசமான பல்வேறு செயல்களுக்காக’ தலைமை நீதிபதிக்கு எதிராக விசாரணை நடத்த வேண்டும் என்று மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் மீண்டும் வலியுறுத்தினார். மற்றொருபுறம் நான்கு நீதிபதிகளின் கலகத்தை முன்னாள் நீதிபதி ஒருவர் கண்டித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

**‘அரசியல் ஊழல்மயமாகிவிட்டது, அதிகார நிர்வாகம் ஊழல்மயமாகிவிட்டது என்று முன்பு கூறினோம்; தற்போது நீதித்துறையும் ஊழல்மயமாகிவிட்டது என்று நாம் கூற வேண்டும்’ என மூத்த நீதிபதி கூறியிருக்கிறார்**

சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறினால், நான்கு மிக மூத்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் அங்கு நிலவும் குழப்பத்தை மட்டுமல்லாது இந்திய நீதித் துறையின் உயர்ந்த அமைப்பிலும் நிலவக்கூடிய கவலையளிக்கும் நிலையையும் வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால், இதற்கு தொடர்புடைய ஆவணங்களைப் புரட்டிப்பார்த்தால், இத்தகைய மோசமான நிலை ஏதோ இங்குமட்டும் நடைபெறவில்லை, அது தனியான ஒன்றுமல்ல.

கடந்த நூற்றாண்டின் 70களின் மத்தியில் அன்றைய காங்கிரஸ் (ஐ) தலைமையிலான மத்திய அரசாங்கத்தின் பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி நாட்டில் நெருக்கடி நிலையைக் கொண்டு வந்ததோடு ‘கடமைப்பட்டுள்ள நீதித்துறையை’ (Committed Judiciary) தான் விரும்புவதாக எந்தத் தயக்கமுமின்றி தெரிவித்தார். அதற்கு சில ஆண்டுகளுக்கு முன்புதான் நீதிபதி ஏ என் ரே, மற்ற மூத்த நீதிபதிகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு இந்தியத் தலைமை நீதிபதியாக மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார். நாட்டின் உயர்நீதிமன்றங்களின் ஏகமனதான முடிவை நிராகரித்து அரசியல் எதிரிகளை தன் இஷ்டப்படி சிறை வைக்கும் இந்திரா காந்தி அரசாங்கத்தின் உரிமைக்கு ஒப்புதல் அளித்தார்.

பின்பு அசோக் சென் சட்ட அமைச்சராக இருந்தபோது, அரசியல் விசுவாசம் என்ற அதே காரணத்திற்காக தலைமை நீதிபதியை அன்றைய பிரதமர் வி பி சிங் நியமித்தார் என்றும் கூறப்படுகிறது. தலைமை நீதிபதி கே ஜி பாலகிருஷ்ணன் தலைமையிலான கொலீஜியம் குற்றச்சாட்டுக்குள்ளான சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரை உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிப்பதற்கான வேலைகள் கிட்டத்தட்ட முடியும் தருவாயில் தன் தலையீட்டின் காரணமாக அது நிறுத்தப்பட்டது என நீதிபதி மார்க்கண்டே கட்ஜூ தனது வலைப் பக்கத்தில் எழுதினார். நீதிபதி கே ஜி பாலகிருஷ்ணனின் பெயரையும் அலுவலக அதிகாரத்தையும் பயன்படுத்தி அவரது மகளும் மருமகனும் ஏராளமான சொத்துக்களை குவித்துள்ளதாக எழுந்த புகாரில் கேரளாவே அதிர்ந்தது, இதுபோன்ற பல குற்றச்சாட்டுகளில் நீதிபதி பாலகிருஷ்ணனின் பெயர் இடம்பெற்றது. புகழ்பெற்ற மூத்த வழக்கறிஞரும் மொரார்ஜி தேசாய் தலைமையிலான அரசாங்கத்தின் சட்ட அமைச்சராக இருந்தவருமான சாந்தி பூஷன் 2010இல் சமர்பித்த பிரமாணப் பத்திரத்தில் முன்னாள் இந்தியத் தலைமை நீதிபதிகளில் 16 பேரில் 8 பேர் ஊழல்வாதிகள் என்று தெரிவித்திருந்தார் (Website: barand bench.com, Sept. 17, 2010).

அலகாபாத் உயர்நீதிமன்றம் முற்றிலும் நாற்றமடிக்கிறது, நீதிபதிகளின் உறவினர்களே வழக்கறிஞர் போர்வையில் வாதாடி தங்களுக்கு ஆதரவான தீர்ப்புகளைப் பெற்றதாகவும் இந்தத் தீர்ப்புகளைப் பயன்படுத்தி ஏராளமாக சம்பாதித்துள்ளனர் என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகளே கூறியுள்ளனர். நாட்டின் மிகப்பெரிய நீதிமன்றமான இதே அலகாபாத் நீதிமன்றத்தில்தான் ஒரு வழக்கை முடிக்க சராசரியாக 12 ஆண்டுகள் எடுத்துக்கொண்டதாகவும் மேல்முறையீடுகள் 40 ஆண்டுகளாக தேங்கிக்கிடக்கின்றன என்றும் இந்த நான்கு நீதிபதிகளில் ஒருவரும் அடங்கிய உச்சநீதிமன்ற அமர்வின்முன்பு தன் அறிக்கையில் அந்த உயர்நீதிமன்றம் அம்பலப்படுத்தியது. ‘தாமதிக்கப் பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி!

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி நியமனத்திற்கான குடியரசு தலைவரின் ஒப்புதலை பெறுவதற்கான உச்சநீதிமன்ற கொலீஜியத்தால் பரிந்துரைக்கப்பட்ட 4 பெயர்கள் கொண்ட பட்டியலிலிருந்து மே 2014லில் மத்திய பாஜக அரசாங்கத்தின் சட்ட மற்றும் நீதி அமைச்சகம் முன்னாள் சொலிசிட்டர் ஜெனரல் கோபால் சுப்பிரமணியத்தின் பெயரை தன்னிச்சையாக நீக்கியது. நீதிபதிகள் நியமனத்தில் வெளிப்படைத்தன்மையையும் ஊழல் நடைபெறுவதற்கான நடைமுறைகளையும் ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு கொலீஜியம் முறையை ஒழித்துவிட்டு தேசிய நீதிபதிகள் நியமன ஆணையத்தை கொண்டுவர மத்திய அரசாங்கம் திட்டமிட்ட சமயத்தில் இது நடைபெற்றது. என்கவுண்டர்கள் என்று கூறப்பட்ட சொராபுதீன், இஸ்ரத் ஜஹான் வழக்குகளில் தனது நடுநிலையான திருப்புமுனைப் பங்களிப்பால்தான் (Amicus curie) உச்சநீதிமன்ற நீதிபதியாக வருவதற்கு தடையாக இருந்திருக்கலாம் என்று ஒரு பேட்டியில் கோபால் சுப்பிரமணியம் தெரிவித்தார். இதில் அமித் ஷா குற்றம் சாட்டப்பட்டிருந்தார், பின்னர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்று மேலே குறிப்பிட்டிருந்தோம். அமித் ஷாவுக்கு எதிரான இரண்டாவது முதல் தகவல் அறிக்கையை உச்சநீதிமன்ற அமர்வுதான் ரத்து செய்தது என்பதையும் இங்கே குறிப்பிடவேண்டும். அந்த அமர்வின் ஒருவராக இருந்த அன்றைய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சதாசிவம் அப்பொறுப்பிலிருந்து ஓய்வுபெற்ற உடனேயே கேரளாவின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். இதில் அவருடைய தொடர்பை சந்தேகிக்காமல் இருக்கமுடியாது.

உயர் பதவி அல்லது செல்வாக்கான பதவி மறுக்கப்படுவது, ஓய்விற்குப் பிறகு பதவிகள் என்று எடுத்துக்கொண்டால் இவை எல்லாமே நீதிபதிகள் நியமனத்தில், ஏன் உயர்ந்த பதவிகளுக்கு நியமிப்பதிலும் மத்திய அரசாங்கம், அதிகாரவர்க்கத்தின் தலைமைபீடு இருப்பதைத்தான் சுட்டிக்காட்டுகின்றன. இந்த கவலையளிக்கும் சூழ்நிலையைக் கண்டு நீதிபதி சிங்வியை’ முன்பு அரசியல் ஊழல்மயமாகி விட்டது, அதிகார நிர்வாகம் ஊழல்மயமாகி விட்டது என்று கூறினோம்; தற்போது நீதித்துறையும் ஊழல்மயமாகிவிட்டது என்று நாம் கூற வேண்டும்’ என்று கூறவைத்துள்ளது.

ஆக, ஜனநாயகத்தின் காவலனாக நீதித்துறை செயல்படவேண்டும், உண்மையான மறுக்க முடியாத தீர்ப்பை வழங்குவதில் பாரபட்சமற்ற நடுநிலையைப் பின்பற்ற வேண்டும் என்று தாங்கள் வளர்ந்துவந்த அந்த ஆரம்ப காலத்தில் பூர்ஷ்வாக்களும் கூட விரும்பிய நிலையில் இன்று நிலைமை நேரெதிராக உள்ளதையே இது காட்டுகிறது. இன்று ஆயிரத்தோரு பாதுகாப்பற்ற சம்பவங்களையும் தங்களது அன்றாட வாழ்வில்கூட அநீதிகளையும் சந்தித்துவரும் பொதுமக்கள் போதிய நீதிபதிகள் இல்லாததால் ஏராளமாக தேங்கிக்கிடக்கும் வழக்குகளாலும் தீர்ப்பு வழங்குவதில் இயல்புக்குப் புறம்பாக காலதாமதம் ஏற்படுவதாலும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நீதியை எதிர்பார்ப்பதே கேலிக்கூத்தானது என்று எண்ணத்தொடங்கிவிட்டனர். பணம் படைத்தவர்களுக்கு முன்னுரிமை கிடைக்கிறது அல்லது அவர்கள் மீதான வழக்குகள் மிகவும் வசதியாக முடிவிலா காலத்திற்கு ஒத்திவைக்கப்படுகின்றன. வழக்கறிஞர்களுக்கான கட்டணம் உயரே பறக்கிறது. காவல்துறை, சட்ட நிபுணர்கள், நீதிபதிகள் ஆகியோர் ஒன்று சேர்ந்துகொண்டு உண்மையை வெளிக் கொண்டுவருவதற்கு மாறாக அதை மூடி மறைக்கின்றனர்; இதனால் நீதி பரிபாலன முறையின் நோக்கமே அப்பட்டமாக மீறப்படுகிறது. வசதிபடைத்தவர்கள்தான் பலனடைகின்றனர். ஏழை நடுத்தர மக்கள் நீதிபரிபாலன முறையிலிருந்து தூக்கியெறியப்படுகின்றனர், நீதி விலைக்கு வாங்கப்படுவதாக குற்றம்சாட்டும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஏழை, நடுத்தர பாடுபடும் மக்களின் போராடிபெற்ற அடிப்படை உரிமைகளை அரசாங்கங்கள் தடுத்தும், ஏன் பறித்தும் வருகின்றன, இதனால் பொதுமக்கள் நீதிமன்றத்தின்மூலம் நிவாரணம் பெறமுடியும் என்று அவர்களால் சிந்திக்கக்கூட முடியவில்லை. நீதித்துறை அமைப்பில் நிலவும் இந்த கடுமையான பிரச்சினைகளோடு அரசியல் தலையீடும் சேர்ந்து கொள்கிறது. எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் நீதித்துறையை தங்களது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள தனது அதிகார நிர்வாகத்தைப் பயன் படுத்திக்கொள்வது அன்றாட நிகழ்வாகிவிட்டது. பணமும் தலையீடும் ஆதிக்கம் செலுத்தும்போது மனசாட்சியுள்ள தகுதியான நபர்கள் இந்தத் துறையில் சேருவதிலிருந்து விலகிக்கொண்டு வருகின்றனர். இதுவே நீதியின் தரம் வீழ்வதற்கும் காரணமாக இருக்கிறது. நீதிபதிகளுமேகூட தங்கள் உயிரைப் பணயம்வைத்து தங்கள் மனசாட்சிப்படியும், நீதிபரிபாலன விதிப்படியும் நீதி வழங்குவதற்குத் தயங்குகின்றனர்.

நாட்டின் மிக மூத்த நீதிபதிகள் நான்குபேர் இந்தியத் தலைமை நீதிபதிக்கு எதிராக கூறியுள்ள குற்றச்சாட்டு சம்பவத்தை இத்தகைய மிகமோசமான சூழ்நிலையின் பின்னணியில்தான் பார்க்க வேண்டும். சிந்திக்கும் மனிதன் எவரும் இதைக் கண்டுகொள்ளாமல் விடமாட்டர். இந்த நெருக்கடியின் ஆணிவேரே முதலாளித்துவ அமைப்புதான் என்பதை பார்க்க அவர்கள் தவற மாட்டார்கள். அதே நேரத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு வரைகூட நிலைமை இவ்வளவு மோசமாக இருக்கவில்லை என்பதை அவர்கள் உணர்வர். பின் எப்படி நிலைமை இப்படிப்பட்ட மோசமான நிலையை அடைந்துள்ளது? இதுதான் உலுக்கும் கேள்வியாகும்.

**முதலாளித்துவ அரசின் முக்கிய மூன்று தூண்களில் ஒன்றான நவீன நீதித்துறை ஒரு காலத்தில் மக்களின் மதிப்பைப் பெற்றிருந்தது**

சட்டமியற்றும் மன்றம் (Legislature), நிர்வாகம் (Executive) (நிர்வாகமென்பது அதிகாரவர்க்கம்–காவல்–ராணுவம்), நீதித்துறை (Judiciary) ஆகியன முதலாளித்துவ அமைப்பின் மூன்று முக்கியமான தூண்களாகக் கருதப்பட்டன. இதில் நீதித்துறை

தொடர்ச்சி 10ம் பக்கம்

## தேசிய மருத்துவ கமிஷன் மசோதா– 2017

# மருத்துவ கல்வியையும் சிகிச்சையையும் முழுக்க வியாபாரமாக்கும் கொடிய திட்டம்

மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான அரசாங்கம் தேசிய மருத்துவ கமிஷன் மசோதா–2017யை (NMC)யை பாராளு மன்ற குளிர்கால கூட்டத்தொடரில் அறிமுகப் படுத்தியது. இந்திய மருத்துவ கவுன்சில் (Medical Council of India) அமைப்பு மிகவும் ஊழல் மலிந்து விட்டதால் அதனிடத்தில் என் எம் சி (NMC) என்ற ஊழலற்ற அமைப்பை ஏற்படுத்தப் போவதாகக் கூறி மருத்துவர்கள், அறிஞர்கள், கல்வியாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என எவரிடமும் எந்தக் கருத்தையும் அறிய முன்வராமல் எதேச்சதி காரமாக இந்த மசோதாவை பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியிருக்கிறது. நாடு முழுவதும் மருத்துவ அமைப்புக்களும் மக்கள்சார் அமைப்புக் களும் காட்டிய எதிர்ப்பால் அதனை பாராளுமன்ற நிலைக்குழுவிற்கு தற்பொழுது அனுப்பியுள்ளது.

### எம் சி ஐயை கலைப்பதால் ஊழல் ஒழியாது

இந்திய மருத்துவ கவுன்சில் என்ற அமைப்பு மருத்துவக் கல்லூரிகள், மருத்துவர்களின் தரத்தை உத்திரவாதப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். இவ்வமைப்பில் ஊழல் தலைவிரித் தாடுவது உலகறிந்த உண்மை. அதன் முன்னாள் தலைவர் கேத்தன் தேசாய் ஊழல் குற்றத்திற்காக சட்டத்தின் முன்னாள் நிறுத்தப்பட்டு தண்டிக்கப் பட்டார். ஆனால் ஊழல் சற்றும் குறைந்தபாடில்லை. குற்றவாளிகளை தண்டிக்க போதுமான சட்டங்கள் இந்நாட்டில் இருப்பினும் அதை நிறைவேற்ற அரசாங்க இயந்திரமே தவறிவிட்ட சூழலில் என் எம் சி என்ற புதிய அமைப்பில் மட்டும் அது எவ்வாறு சாத்தியமாகும்? மாறாக, இம் மசோதாவின் ஷரத்துக்கள் ஊழல் பெருகிட போதுமான ஓட்டைகளை கொண்டிருக்கிறது. எனவே தலைவலிக்காக தலையையே எடுப்பது பிரச்சினைக்கு தீர்வாகாது.

மேலும், இந்நாட்டின் பாராளுமன்றம், உச்ச நீதிமன்றம், சி பி ஐ (மத்திய புலனாய்வு துறை) போன்றவற்றில் இருந்தவர்களும் இருப்பவர்களும் கூட ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கியிருக்கும் வேளையில் அவ்வமைப்புக்களை கலைக்க யோசனை வராதபொழுது எம் சி ஐயை மட்டும் கலைப்பது எவ்வகையில நியாயம்? எம் சி ஐ பிற அரசாங்க அமைப்புகளிலிருந்து எவ்வாறு மாறுபட்டது? ஆகவே எம் சி ஐயை கலைக்க வேண்டும் என்பதற்கு வேறெதேனும் உள்நோக்கம் உள்ளதா எனும் கேள்வி எழுகிறது.

### சுயாட்சி கொண்ட எம் சி ஐயை கலைக்கும் ஜனநாயக விரோத போக்கு

எம் சி ஐ என்பது ஒரு பாராளுமன்ற சட்டம் மூலம் உருவாக்கப்பட்ட சுயாட்சி உரிமைகள் கொண்ட அமைப்பாகும். மருத்துவர்கள், பல்கலைக் கழக பேராசிரியர்கள், பல்வேறு மாநிலப் பிரதிநிதித்துவம் கொண்ட ஒரு தேர்ந்தெடுக்கப் பட்ட சுயாட்சிகொண்ட ஒரு ஜனநாயக அமைப் பாகும். தேர்வுமுறைகள், பாடத்திட்டம், நிர்வாக அம்சங்கள் ஆகியவை குறித்து விவாதித்து முடி வெடுக்கும் தன்மை கொண்டதாகும் இவ்வமைப்பு.

ஆனால் முன்மொழியப்பட்டுள்ள என் எம் சி அமைப்பில் மருத்துவரல்லாதவர்களும் தனியார் கல்வி நிறுவன வியாபாரிகளும் நியமிக்கப்படுவர். சுகாதாரமும் கல்வியும் அரசியலமைப்புச் சட்டத்தில் ஒருங்கியல் அதிகாரப்பட்டியலில் (Concurrent List) இருக்கும்பொழுது என் எம் சியின் 25 உறுப்பினர்களையும் மத்திய அரசாங்கம் மட்டுமே நியமிக்கும் உரிமை கொண்டுள்ளது. (என் எம் சி மசோதா: பாகம் 2: 'தேசிய மருத்துவ கமிஷன் அமைப்புச் சட்டம்; பகுதி|உட்பகுதி 3லிருந்து 8வரை)

மருத்துவ கல்லூரிகளைத் திறப்பது வழிநடத்து வது நிர்வகிப்பது, மருத்துவர்களின் தகுதியை நிர்ணயிப்பது என்று ஒட்டுமொத்த கட்டுப் பாட்டையும் மத்திய அரசாங்கமே எடுத்துக் கொள்வது நிர்வாக ரீதியிலான அதிகாரத் துவத்திற்கே இட்டுச் செல்லும். இத்துறையில் தனியார்மயமும் வியாபாரமயமும் ஊழலும் கொடிகட்டிப் பறக்கும்.

எனவே என் எம் சியை ஏற்படுத்துவது தீர்வாகாது, அது தற்போதைய நோயைவிட மிக ஆபத்தானது. அது அதிகாரத்தை ஓரிடத்தில் குவித்து, பல்கலைக்கழகங்களின் சுயாட்சியைப் பறித்து நமது கூட்டாட்சியையும் ஜனநாயக நடைமுறையையும் கேலிக்கூத்தாக்குகிறது.

### தனியார் கல்வி நிறுவனங்கள் ஆதாயமடையவே என் எம் சி உதவும்

என் எம் சி மசோதாவின் பகுதிகள் 28, 29 ஆகியவை புதிய தனியார் மருத்துவக் கல்லூரியை நிறுவ அனுமதியளிக்கும் அதிகாரத்தை அதற்கு வழங்குகிறது. இம்மசோதாவின் 5வது பாகம் பகுதி 26இல் குறிப்பிடப்பட்டுள்ளது யாதெனில் இனிமேல் தனியார் அமைப்புகளேகூட மருத்துவக் கல்லூரிக்கு உயர்தர நற்சான்றிதழ் கொடுத்து ஏமாற்றுவதை யார் தடுக்கஇயலும். எனவே தனியார் கார்ப்பொரேட் நிறுவனங்களிடம் ஒட்டுமொத்தமாக சரணாகதி அடைவதிலேயே போய்முடியும் இது.

### எம் பி பி எஸ் படித்து முடித்தாலும் தேசிய லைசன்சியேட் தேர்வில் வெற்றிபெற்றவரே இனி மருத்துவர்!

ஐந்தரை ஆண்டுகள் கடினமாக உழைத்து எம் பி பி எஸ் பட்டம் பெற்று தலைசிறந்த மருத்துவர்களாக எண்ணற்றோர் உருவாகியது அனைவரும் அறிந்ததே. ஆனால் அத்தகைய முறையையும் தாண்டி தேசிய லைசன்சியேட் தேர்வை (National Licentiate Exam) எழுதி வெற்றிபெற்றாலே இனி ஒருவர் மருத்துவராகக் கருதமுடியும் என்கிறது என் எம் சி மசோதா. என் எல் இ பல தேர்வு (Multiple Choice) முறையிலான ஒரு கேள்வித்தாளாகும். மருத்துவம் போன்ற கிளினிக்கல் நடைமுறையின் நுணுக்கமான அனுபவத்தை பிரதானமாகக்கொண்ட படிப்பை என் எல் இ என்ற சில மணிநேரத் தேர்வு எவ்வாறு மதிப்பீடு செய்யஇயலும்? கலை, அறிவியல், பொறியியல் பட்டயப்படிப்பு, ஐ ஐ டிக்கள், ஐ ஐ எம்கள் வழங்கும் பட்டயங்களும் ஏற்றுக் கொள்ளப்படும் வேளையில் மருத்துவ மாணவர் களை மட்டும் இவ்வாறு தரம் தாழ்த்துவது அநியாயமானது.

மேலும், முதுநிலைப் பட்டயப்படிப்பு (PG Course) மருத்துவராக தன்னை பதிந்து கொள் வதற்கான அளவீடு, வெளிநாட்டில் மருத்துவம் பயின்றோர் என அனைத்திற்கும் என் எல் இ தேர்வு 'ஒரே அளவுகோலாக' எவ்வாறு இருக்க முடியும்? முடியாதென்றால் இது ஏன் திணிக்கப் படுகிறது? ஏனெனில் மருத்துவ படிப்பு நாளடைவில் பெரும் வியாபாரமாகி கோடிக்கணக்கில் பணம் புரளுகிறது. இதில் தற்பொழுது அந்நிய நாட்டு பணக்கார மாணவர்களும் புதிய போட்டி யாளர்களாக வந்து கேட்ட பணத்தை கொடுக்கத் தயாராக இருக்கின்றனர். ஏனென்றால், டாலர் மதிப்பில் இந்திய மருத்துவக் கல்வியின் விலை அவர்களுடைய நாட்டு பணத்தைக் காட்டிலும் குறைவானதே. இதனால் ஒட்டுமொத்த மருத்துவக் கல்வியும் 'உலகச் சரக்காகி' மருத்துவ சிகிச்சை யின் தரம்குறைவதோடு இந்திய ஏழை, நடுத்தர மக்களுக்கு முடியாததுமாக ஆகிவிடும்.

### நீட் தேர்வு: தங்குதடையற்ற வியாபாரமயத்தை ஊக்குவித்து ஏழை மாணவர்களுக்கு மருத்துவக் கல்வியை மறுக்கும் திட்டம்

இதுநாள்வரை இளநிலை, முதுநிலை மருத்துவப் பட்டயப் படிப்பு மத்திய, மாநில அரசாங்கங்களின் ஒருங்கிணைந்த பட்டியலில் இருந்துவந்தது. அந்தந்த மாநிலங்களே +2 தேர்வு அல்லது மாநில அளவிலான நுழைவுத் தேர்வுகள்மூலம் எம்பிபிஎஸ் படிக்க மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். ஆனால் மத்திய அரசாங்கம் நீட் தேர்வை நாடு முழுக்க திணித்ததன்மூலம் எம் பி பி எஸ் மட்டுமின்றி முதுநிலை பட்டயங்களுக்கும் நுழைவுத் தேர்வை நடத்தும் பொறுப்பை எதேச்சதிகாரமாக கையிலெடுத்துக்கொண்டது. மேலும் இத்தேர்வுகள் உலகம் முழுவதிலிருந்து யார் வேண்டுமானாலும் எழுதலாம் என்று இந்திய மருத்துவப் பட்டயங்களை உலகச் சந்தைக்கு திறந்துவிட்டது.

எனவே பிற நாட்டு பணக்கார மாணவர்களுடன் போட்டியிடும் போக்கில் மருத்துவப் படிப்புக் கட்டணங்கள் பல கோடிகளாக எகிறும் அபாயம் உண்மையாகிவிட்டது. அரசு மருத்துவ கல்லூரி களுக்குள்ளும் அந்நிய நாட்டு மாணவர்கள் நுழைந்து நம் நாட்டு ஏழை, நடுத்தர மாணவர்களுக்கு இருந்துவந்த இறுதி வாய்ப்பும் பறிபோவது உண்மையாகிவிட்டது. இது மட்டுமின்றி, நுழைவுத் தேர்வுக்காக கோச்சிங் என்றபெயரில் நடைபெறும் கல்விக் கொள்ளைக்கு ஈடுகொடுக்க முடியாமல் நீட் தேர்வு தயாரிப்பின் துவக்கத்திலேயே ஏழை மாணவர்கள் புறந்தள்ளப்படும் அவலநிலையும் தலைதூக்கியுள்ளது. என் எம் சி மசோதா என் எல் இ மற்றும் நீட் தேர்வுகளை சட்டபூர்வமாக்க முனைகிறது. இவ்விரண்டுத் தேர்வுகளும் தகுதி அல்லாது பணத்திற்கே அதிக முக்கியத்துவம் வழங்குகிறது. இது தங்குதடையற்ற வியாபார மயத்திற்கே இட்டுச்செல்லும். இதனால் மாணவர் களின் கல்வித் தகுதி கேலிக்கூத்தாகும். மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை கட்டிக்காக்க விரும்பிய அரசியல் சாசனத்தின் கோட்பாடுகளை இது மீறுகிறது என மருத்துவக் கல்லூரிகளில் "கேபிடேஷன் கட்டணம்" மற்றும் "நிர்வாக இடஒதுக்கீடு" குறித்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகளில் அவ்வப்பொழுது வெளியிட்ட கவலையை உறுதிப்படுத்துகிறது.

### தங்குதடையற்ற தனியார் மருத்துவக் கல்லூரி கட்டணங்களும் இடங்களும்

என் எம் சி கூறுவது யாதெனில தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 40% இடங்களின் கட்டணங்களை மட்டுமே அரசாங்கம் தீர்மானிக்கும். மீதமுள்ள 60சதவீத இடங்களின் கட்டணங்களை தீர்மானிக்கும் உரிமை தனியார் நிர்வாகங்களுக்கே வழங்கப்படும். (என் எம் சி மசோதா: கமிஷனின் அதிகாரங்களும் செயற்பாடுகளும்; பகுதி 10, உட்பகுதி (1), ஷரத்து (1).

பற்பல லட்சங்கள் கொடுத்து மருத்துவராகும் ஒருவர் தனது முதலீட்டை திரும்பபெறும் நோக்கோடு தமது நோயாளிகளை நிர்ப்பந்தித்து பல பரிசோதனைகளை மேற்கொள்ளச் செய்வதோடு விலைஉயர்ந்த மருந்துகளையே பரிந்துரைப்பார். இப்படிப்பட்ட மருத்துவரிடமிருந்து கனிவையும் சமூக உணர்வையும் மருத்துவ நீதிநெறிகளையும் எதிர்பார்ப்பது முரண்பட்ட நிலையாகும். மருத்துவம், மருத்துவ சிகிச்சை என்ற உன்னதத் துறையில் பெருகும் வியாபாரமயம் மருத்துவர்–நோயாளி களுக்கிடையில் உள்ள உறவை சீர்குலைத்து அழிக்கும். தனியார் கல்வி நிறுவனங்களில் அரசாங்கக் கோட்டா குறித்து என் எம் சி மௌனம் காக்கிறது. இளநிலை, முதுநிலை பட்டயப்படிப்பு களில் உள்ள இடங்களை தம் இஷ்டத்திற்கு அக்கல்லூரிகள் உயர்த்திக்கொள்ள அவர்கள் என் எம் சியின் தயவைப் பெறவேண்டிய அவசியமில்லை.

### மக்கள் சார்பு மருத்துவமும் மருத்துவர்களும் பின்னுக்குத் தள்ளப்படும் அவலநிலை

இதுநாள்வரை அரசாங்கக் கல்லூரிகளில் அந்தந்த மாநில அரசாங்கத்தால் நடத்தப்படும் தேர்வுகளிலிருந்து வாய்ப்பு கிடைத்தது. மருத்துவ ராகிய பலர் அரசாங்க மருத்துவமனைகளில் பணியாற்றி நல்ல அனுபவமுள்ள பல மருத்துவர் கள் மக்களிடம் எந்த தயவையும் எதிர்பாராது மிகச்சொற்ப வருமானத்தைப் பெற்றுக்கொண்டு சிறந்த மருத்துவ சிகிச்சை அளித்துவந்துள்ளனர், அளித்துகொண்டுமிருக்கின்றனர். ஆனால் மருத்துவத் துறையை உலகச் சந்தைக்கு என் எம் சி திறந்து விடுவது அரசாங்க மருத்துவமனைகளுக்கு சேவை மனப்பாங்குள்ள மருத்துவர்கள் கிடைப்பது அரிதா வதுடன் அவை நிலைகுலைந்து லாபநோக்குடனான மருத்துவர்கள் அதிகமாகி தனியார் மருத்துவ மனைகள் பல்கிப்பெருகும்.

ஏற்கெனவே தனியார் மருத்துவமனைகளில் பொறுப்பற்ற லாபநோக்கு நடைமுறையால் மருத்துவர்–நோயாளிகளுக்கிடையேயான உறவு பல

தொடர்ச்சி 4ம் பக்கம்

# மருத்துவ கல்வியையும் மருத்துவ சிகிச்சையையும் மக்கள் அனைவருக்கும் வழங்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்

3ம் பக்கத் தொடர்ச்சி

நேரங்களில் பாதிக்கப்பட்டு தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளது இதற்குச் சான்று. இது ஏழை, நடுத்தர மக்களுக்கு மருத்துவசிகிச்சையை மறுப்பதில் சென்றுமுடியும்.

### ஆயுஷ் மருத்துவர்களை அலோபதி மருத்துவர்களாக்கும் அவசரகதியிலான முயற்சி

நமது நாட்டில் பண்டைய பழமையா மருத்துவ சிகிச்சை முறைகளான ஆயுர்வேதா, ஹோமியோ பதி, சித்தா, யுனானி மருத்துவ சிகிச்சை நாடுமுழு வதும் பல மருத்துவர்களால் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. இவர்கள் ஒரு 6 மாத படிப்பு படித்துவிட்டு அலோபதி (நவீன மருத்துவ சிகிச்சையை நடைமுறைப்படுத்தலாம் என்று மத்திய அரசாங்கம் முடிவெடுத்திருப்பது ஒருதவறான போக்காகும். இது இந்திய மருத்துவ சிகிச்சையையும் ஹோமியோபதியையும் நவீன மருத்துவ சிகிச்சை முறையையும் சிறுமைப்படுத்துவதிலேயே சென்றுமுடியும்.

மாறாக, மனிதன் மற்றும் உயிர்களைக் காக்கும் இவ்வனைத்து முறைகயையும் விஞ்ஞானபூர்வமாக இணைத்து மருத்துவத் துறையின் அறிவுப்பொக்கி ஷத்தை செறிவூட்ட ஆவன செய்யவேண்டும். விஞ்ஞானிகள், அறிஞர்கள், கல்வியாளர்கள் அரசாங்கத்திடமிருந்து போதிய நிதிபெற்று தீவிர விஞ்ஞானபூர்வமான ஆராய்ச்சிகளையும் பரிசோதனைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

அதேபோன்று மருத்துவர்கள் பற்றாக்குறையைப் போக்க குறுக்கப்பட்ட 3 ஆண்டுகால மருத்துவப் படிப்பும் ஆகச்சிறந்த உபாயம் அல்ல. இதன்மூலம் போதிய அறிவும் அனுபவமும் பெற்ற மருத்துவர் கள் உருவாகாமல் அது மேலும் சிக்கலையே ஏற்படுத்தும். மேலும் கிராமப்புறங்களுக்குச் சென்று மருத்துவர்கள் பணியாற்றத் தயங்குகிறார்கள் என்பதும் ஆராயப்படவேண்டிய ஒன்றாகும். போதிய மருத்துவ சிகிச்சை உபகரணங்களும் கட்டுமானங் களும் அனுபவமிக்க மருத்துவர்களும் நியமிக்கப் பட்டால் புதிய மருத்துவர்கள் அங்கு பணியாற்ற நிச்சயம் முன்வருவார்கள். அரசாங்கங்கள் இதுகுறித்து ஆழ்ந்து பரிசீலிக்கவேண்டும்.

### தேசிய மருத்துவ பாதுகாப்புத் திட்டம் முதலாளிகளுக்காகவா? ஏழைகளுக்காகவா?

நூறு கோடி மக்களுக்குமேல் வாழும் நமது நாட்டில் மருத்துவ சிகிச்சையும் அதிக எண்ணிக் கையில் மருத்துவர்களும் தேவைப்படுகின்றனர். இதற்காக போதிய எண்ணிக்கையில் மருத்துவக் கலலூரிகளையும் மருத்துவமனைகளையும் திறக்க வேண்டும், அதற்கு அதிக நிதி ஒதுக்கவேண்டும். ஆனால் அதற்கு நிதி இல்லை என்று கைவிரிக்கும் மத்திய அரசாங்கம் 2018 பிப்ரவரியில் வெளியிட்ட பட்ஜெட்டில் 50 கோடி இந்தியர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ5 லட்சம் வீதம் மருத்துவக் காப் பீட்டிற்காக ரூ1,200 கோடி ஒதுக்கியுள்ளது. தேசிய மருத்துவப் பாதுகாப்புத் திட்டம் என்று பெயரிடப் பட்டுள்ள இந்தத் திட்டத்தில் செலவிடப்படும் ரூ1,200 கோடி யாருக்குச் சென்றடையும்? இதன் பெரும்பங்கு தனியார் மருத்துவமனைகளுக்கே சென்றடையும் என்பதில் இருவேறு கருத்து இருக்கமுடியாது.

அதேவேளையில் ரூ1,200 கோடியை முறையாகப் பயன்படுத்தினால் பற்பல மருத்துவமனைகளையும் மருத்துவக் கல்லூரிகளையும் துவக்கி ஏழை, எளிய மக்களுக்கு இலவசமாகவே மருத்துவ சிகிச்சை வழங்கமுடியும். மத்திய அரசாங்கத்தின் இந் நடவடிக்கை கார்ப்பொரேட் முதலாளிகளுக் காகவே அன்றி சாதாரண குடிமக்களுக்காக அல்ல.

தனியார் மருத்துவ கல்லூரிகளிலும் மருத்துவ மனைகளிலும் வியாபாரமயத்தை ஒழித்து மக்கள்சார்பு மருத்துவ கொள்கையை வகுக்கவேண்டும்

நமது நாட்டில் மருத்துவம் உள்ளிட்ட தொழிற் கல்வி முழுக்கமுழுக்க வியாபாரமாகிவிட்டது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும்விதத்தில் உரிய சட்டம் இயற்றப்படவேண்டும். அதில் கீழ்க்கண்ட அம்சங்கள் உறுதிசெய்யப்பட வேண்டும்.

1) தனியார் கல்வி நிர்வாக ஒதுக்கீடு முற்றிலும் ஒழிக்கப்படவேண்டும். அனைத்து இடங்களையும் அரசாங்கமே எடுத்துக்கொண்டு தகுதி அடிப் படையில் அவற்றை நிரப்பவேண்டும். அதற்கு மாநில அளவிலான நுழைவுத் தேர்வு பொருத் தமானதாக இருக்கும்.

2) மருத்துவக் கல்லூரிக் கல்விக் கட்டணம் ஒரு ஏழை மாணவனும் செலுத்தக்கூடியதாக இருக்கவேண்டும்.

3) அரசு மருத்துவமனைகளுக்கும் பொது சுகாதார அமைப்பிற்கும் போதுமான நிதி ஒதுக்கப் பட்டு பலப்படுத்தப்படவேண்டும். நாடு முழு வதிலுமுள்ள தனியார் மருத்துவ சிகிச்சைக் கட்டணங்கள் ஏழை, நடுத்தர மக்களை ஒட்டாண்டியாக்கி வருகிறது. எனவே அவற்றை முற்றிலும் ஒழித்து பொது சுகாதார சேவையை போதுமான நிதிஒதுக்கி வளர்த்து பலப்படுத்த வேண்டும்.

4) இந்திய மருத்துவ கவுன்சில் (எம் சி ஐ) ஊழலில் புரையோடிப் போய்விட்டது உண்மை தான் நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டங்களைக் கொண்டே அதன்மீது கடும் நடவடிக்கை எடுத்து எம் சி ஐயை பலப்படுத்தவேண்டும். ஆனால் அதற்கு ஒருபோதும் என் எம் சி தீர்வாகாது.

மேற்கூறிய மக்கள்சார்பு மருத்துவக் கொள்கை யையும் திட்டங்களையும் வகுத்தெடுத்து மருத்துவக் கல்வியையும் சிகிச்சையையும் அனைத்து மக்களுக் கும் உத்திரவாதப்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும்.

ஆனால் இதை செய்ய அரசாங்கம் முன்வராத சூழலில் அதனை நிர்ப்பந்திக்கும் விதத்தில் மாணவர்களும் இளைஞர்களும் பெண்களும் தொழிலாளர்களும் ஜனநாயக இயக்கங்களை நாடுமுழுவதும் கட்ட முன்வரவேண்டும் ■

# டார்வினின் பரிணாம கருத்தியல் தவறானது என்ற மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சரின் கூற்றை விஞ்ஞானிகள், கல்வியாளர்கள் நல்லெண்ணம் கொண்டோர் எதிர்த்திடுமாறு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) அறைகூவல் விடுக்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள், ஜனவரி 23, 2018 அன்று வெளியிட்ட அறிக்கை:*

மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் இணை அமைச்சரான பாஜகவின் சத்யபால் சிங் டார்வினின் பரிணாம கருத்தியல் "விஞ்ஞான பூர்வமாகத் தவறு" என்றும் ஆதலால் பள்ளி கல்லூரி பாடத்திட்டத்திலிருந்து அதனை நீக்கிடவேண்டும் என்றும் அவர் கூறிய அபத்தமான விஞ்ஞானத்திற்கு புறம்பான கருத்தை நாம் கடுமையாக எதிர்க்கிறோம். விஞ்ஞானபூர்வ ஆதாரங்களையும் பரிசோதிக்கப்பட்ட உண்மை களையும் உலகமுழுவதிலுமுள்ள விஞ்ஞானிகள் உறுதிப்படுத்திய, காலத்தால் பரிசோதிக்கப்பட்ட விஞ்ஞானரீதியிலான கருத்தியலாக இருக்கும் பொழுது பாஜகவின் அமைச்சர் மனிதக்குரங்கி லிருந்து மனிதன் மாறியதை தாம் கண்டதாக நம் முன்னோர்கள் எங்கேயும் குறிப்பிடவில்லை என்றும் நமது தாத்தாக்கள் பாட்டிகள் கூறும் கதைகளிலும் அது குறிப்பிடப்படவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

தெளிவாக, அமைச்சரின் இக்கூற்று அனைத்து வகையான விஞ்ஞானபூர்வ கருத்தியல்கள், பகுத்தறிவு சிந்தனை செயற்போக்கினை கைவிடும் ஆர்எஸ்எஸ்–பாஜகவின் கெடு நோக்குடன் ஒத்திசைந்ததாகும். ஆன்மீகவாத குருட்டுத்தனத்தில் சிறைவைப்பதற்காக அனைத்துவித மூடத்தனம், மதவெறி, மதச்சீர்த்திருத்தம், பிற்போக்கு சிந்தனைகளில் மக்கள் மனதை மூழ்கடிக்கும் முயற்சியாகும். அதன்மூலம் கேள்விக்குள்ளா வதிலிருந்தும் எதிர்ப்பிற்குள்ளாவதிலிருந்தும் இந்த சீரழிந்த, மரணப்படுக்கையிலுள்ள, ஈவிரக்கமற்ற ஒடுக்குமுறை முதலாளித்துவ அமைப்பை பாதுகாக்கும் முயற்சியாகும்.

விஞ்ஞானிகளும் அறிவியல் அறிஞர்களும் இதை ஏற்கனவே எதிர்த்திருப்பதோடு மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகத்திற்கும் பிரதமர் அலுவலகத்திற்கும் ஒரு கடிதத்தையும் சமர்பிக்க இருக்கின்றனர். ஜனாதிபதிக்கு 3,600 கையெழுத்துக் கள் ஏற்கனவே சமர்பிக்கப்பட்டுவிட்டது. அடுத்த இரண்டு நாட்களில் மேலும் பல கையெழுத்துக்கள் அனுப்பப்பட இருக்கின்றன. அவர்களது இந்த நியாயமான எதிர்போடு நாமும் இணைவதுடன் அனைத்து விஞ்ஞானிகள், கல்வியாளர்கள், அறிவு ஜீவிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், அனைத்துப் பகுதியைச் சேர்ந்த சரியாகச் சிந்திக்கும் உண்மையைத் தேடும் நேர்மையான மக்கள் அமைச்சரின் இந்த உள்நோக்கம் கொண்ட அறிவிப்பை திரும்பப்பெற நிர்ப்பந்திக்க முழு ஆதரவு நல்குமாறும் வேண்டுகிறோம் ■

# பணபலம், ஆள்பலத்தால் தற்போது தேர்தல் கட்டுப்படுத்தப் படுகிறது என முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் ஒப்புதல்

"என்னுடைய 5 1/2ஆண்டுகால இந்திய தலைமை தேர்தல் ஆணையர் பதவி காலத்தின் போது "பண பலத்தின் சக்தி" பூதாகரமாக அதிகரித்ததை நான் கண்டேன். அதேபோலவே துயரம் தருவதென்னவென்றால் "ஆள் பலம்".... இந்த எதிர்மறை சக்திகள் நாட்டின் ஜனநாயக கட்டமைப்பை ஏற்கெனவே பலகீனப்படுத்தி விட்டன, காலனி ஆட்சியிலிருந்து விடுதலைப்பெற எவ்வளவோ தியாகம் புரிந்த நமது விடுதலைப் போராட்டவீரர்களின் கனவுகள் குறித்து நாம் எப்போதாவது எண்ணிப்பார்த்திருக்கிறோமா எனவும் நான் வியந்ததுண்டு. 'பணபலம், ஆள்பலம்' ஆகிய இரண்டையுமுடைய நமது சொந்த நிதி ஆட்சியதிகாரவர்க்கத்தால் அந்நிய ஆட்சியானது வருந்தத்தக்க வகையில் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.... வாக்காளர்களுக்கு லஞ்சம் தர 'நுட்ப'மான வழிகளெல்லாம் கட்சி களால் வளர்த்தெடுக்கப்பட்டிருக்கின்றன.... பொதுத் தேர்தலுக்கான 70லட்சம், சட்டசபைக் கான 28லட்சம் என்ற செலவு உச்சவரம்பைக்கூட மதிநுட்பமான முறைகளில் இந்த அரசியல்வதிகள் அடித்து நொறுக்கிவிடுகின்றனர். சட்டப்படியான உச்சவரம்பைமீறி மிகஅதிக செலவு செய்யும் அரசியல்வாதிகள் எதிலும் சிக்கிக்கொள்ளாமல் தங்களைப்பார்த்துக்கொள்கின்றனர் என்பது அறிந்ததே.... குற்றம் புரிவதன் மூலம் லாபம் கிடைக்குமென்றால் .... "பணபலமும் ஆள்பல"மும் தேர்தல் வெற்றிகளை தீர்மானிப்பதற்கான முக்கிய காரணியாக செயலாற்றுகிறது. 15வது அதேபோல் தற்போதைய லோக்சபாவின்

தொடர்ச்சி 6ம் பக்கம்

# இயக்கவியல் முறை – ஜே வி ஸ்டாலின்

***இவ்வுலகில் அனைத்தும் இயக்கத்தில் இருக்கின்றன. . . வாழ்க்கை மாறிக்கொண்டிருக்கின்றது, உற்பத்தி சக்திகள் வளர்ந்துகொண்டிருக்கின்றன, பழைய உறவுகள் சிதைந்துகொண்டிருக்கின்றன*** – **காரல் மார்க்ஸ்**

மார்க்சிசம் என்பது சோசலிசத்திற்கான கருத்தியல் மட்டுமல்ல. இது முழுமையானதோர் உலகக் கண்ணோட்டமும் ஒரு தத்துவார்த்த முறையுமாகும். தர்க்கரீதியில் மார்க்ஸின் பாட்டாளிவர்க்க சோசலிசம் இதிலிருந்துதான் பின்வருகின்றது. இந்தத் தத்துவார்த்தமுறையே இயக்கவியல் பொருள்முதல்வாதம் என அழைக்கப்படுகின்றது.

எனவே, மார்க்சிசத்தை விளக்கியுரைத்தல் என்பதன் பொருள் இயக்கவியல் பொருள்முதல் வாதத்தையும் விளக்கியுரைத்தல் என்பதாகும்.

இது ஏன் இயக்கவியல் பொருள்முதல்வாதம் என அழைக்கப்படுகின்றது?

ஏனெனில், இதன் வழிமுறை இயக்கவியலாகவும் அதன் கருத்தியல் பொருள்முதல்வாதமாகவும் இருக்கின்றது.

இயக்கவியல் முறை என்பது என்ன?

சமூக வாழ்க்கை என்பது தொடர்ச்சியான இயக்கத்திலும் வளர்ச்சியிலும் இருந்துகொண்டிருக்கின்றது எனக் கூறப்படுகிறது. இது உண்மையே. வாழ்க்கை மாற முடியாத, நிலையான ஏதோ ஒன்று எனக் கருதிடக் கூடாது. இது ஒருபோதும் ஒரே நிலையில் அப்படியே இருப்பதில்லை. இது என்றென்றும் இயக்கத்தில் உள்ளது. இது என்றென்றும் நடக்கக்கூடிய அழிவு மற்றும் ஆக்கத்தின் ஓர் முடிவில்லா செயல்முறைப் போக்காகும். ஆதலால், வாழ்க்கையானது புதியதையும் பழையதையும், வளர்ந்துகொண்டிருப்பதையும் மரணித்துக் கொண்டிருப்பதையும், புரட்சிகரமானதையும் எதிர்ப்புரட்சிகரமானதையும் உள்ளடக்கியுள்ளது.

வாழ்க்கை உண்மையில் எப்படியிருக்கின்றதோ அப்படியேதான் அதனை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும் என இயக்கவியல்வாத வழிமுறை நமக்குக் கூறுகிறது. வாழ்க்கை என்பது தொடர்ச்சியான இயக்கத்தில் இருக்கின்றது என்பதை நாம் பார்த்தோம். இதன் காரணமாக, வாழ்க்கை அதன் இயக்கத்தில் இருக்கின்றது என்பதாகக் கருதுவதுடன், வாழ்க்கை எங்கு சென்றுகொண்டிருக்கின்றது என்ற கேள்வியைக் கேட்டாக வேண்டும்? வாழ்க்கை இடையறாத அழிவையும் ஆக்கத்தையும் கொண்டதாக இருக்கிறது என்பதை நாம் பார்த்தோம். இதன் காரணமாக, நாம் வாழ்க்கையை அழிவு மற்றும் ஆக்கம் என்ற அதன் செயல்முறைப் போக்கிலேயே ஆராய்ந்தாக வேண்டும். அத்துடன், வாழ்க்கையில் எது அழிந்துகொண்டிருக்கிறது, எது உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது என்ற கேள்வியையும் கேட்டாக வேண்டும்.

அதில் தோன்றிய வாழ்க்கை ஒவ்வொரு நாளும் வளர்ச்சியடைந்துகொண்டு வெல்லற்கரியதாக இருக்கின்றது. அதன் முன்னேற்றத்தை தடுத்திட முடியாது. உதாரணத்திற்குக் கூறுவதானால், எண்ணிக்கையில் இன்று எத்தகைய பலவீனமானதாகவும் சிறியதாகவும் இருந்தாலும், வாழ்வில் பாட்டாளி வர்க்கம் ஒரு வர்க்கமாகத் தோன்றி ஒவ்வொரு நாளும் வளர்ச்சியடைந்துகொண்டு இறுதியில் அது வெற்றிகொண்டாக வேண்டும். ஏன்? ஏனெனில், அது வளர்ந்துகொண்டும் பலம் பெற்றுக்கொண்டும் முன்னேறிக்கொண்டும் இருக்கின்றது. மற்றொருபுறம், வாழ்வில் முதுமையடைந்து கொண்டு அதன் அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருப்பது, இன்று ஒரு மிகப்பெரும் சக்தியாக இருப்பினும் தவிர்க்கவியலாமல் அது தோல்வியைத் தழுவித்தானாக வேண்டும். உதாரணத்திற்குக் கூறுவதானால், பூர்ஷ்வாக்கள் ஒவ்வொருநாளும் படிப்படியாக தங்களின் பிடியை இழந்துகொண்டும் வெகுதூரம் மேலும் மேலும் பின்னோக்கிச் சென்றுகொண்டும் இருக்கின்றனர். இதன் பின்னர், அது இன்று எவ்வளவுதான் பலமிக்கதாகவும் எண்ணிக்கைகொண்டதாகவும் இருப்பினும், காலப்போக்கில் அது தோல்வியைத் தழுவியேயாக வேண்டும். ஏன்? ஏனெனில், ஒரு வர்க்கமாக அது சிதைந்துகொண்டிருக்கின்றது, அது பலவீனமாக வளர்ந்துகொண்டிருக்கின்றது, அது முதுமையடைந்து கொண்டிருக்கின்றது, அது வாழ்விற்கு சுமையாக ஆகிக்கொண்டிருக்கின்றது.

அதாவது, ஒவ்வொரு நாளும் வளர்ந்துகொண்டிருப்பது முற்போக்கானதென்பதும் (Rational), ஒவ்வொரு நாளும் சிதைந்துகொண்டிருப்பது பிற்போக்கானது (Irrational), இதன் காரணமாக அது தோல்வியைத் தவிர்க்க இயலாது என்ற பிரபலமான இயக்கவியல் கருத்து அனைத்திலும் உண்மையில் இருக்கின்றதென்பதை இங்கு காணமுடிகிறது.

உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம். கடந்த நூற்றாண்டின் எண்பதுகளில் (1880களில்) இரஷ்யாவிலுள்ள புரட்சிகர அறிவுஜீவிகள் மத்தியில் ஒரு மிகப்பெரும் சர்ச்சை உருவானது. நரோட்னிக் எனப்பட்டவர்கள் "இரஷ்யாவை விடுதலையடையச் செய்யும்" கடமையை மேற்கொள்ளக்கூடிய பிரதான சக்தி கிராமப்புற, நகர்ப்புற குட்டி பூர்ஷ்வாக்களே என உறுதிபடக் கூறினார்கள். ஏன்? என அவர்களை மார்க்சிஸ்டுகள் கேட்டனர். ஏனெனில், இப்போது கிராமப்புற, நகர்ப்புற குட்டி பூர்ஷ்வாக்கள்தான் பெரும்பன்மையானவர்களாகவும், மேலும் ஏழைகளாகவும், வறுமையில் வாழ்ந்துகொண்டும் இருக்கின்றனர் என நரோட்னிக்குகள் அதற்குப் பதிலளித்தனர்.

அதற்கு மார்க்சிஸ்டுகள் இவ்வாறு பதிலளித்தனர்: கிராமப்புற, நகர்ப்புற குட்டி பூர்ஷ்வாக்களே இப்போது பெரும்பான்மையினராகவும் உண்மையில் ஏழைகளாகவும் இருக்கின்றனர் என்பது உண்மையே.

ஆனால், விஷயம் அதுவா? நீண்ட காலமாக குட்டி பூர்ஷ்வாக்கள் பெரும்பான்மையினராக இருக்கின்றனர், ஆனால் அது "சுதந்திரத்திற்கான" போராட்டத்தில் பாட்டாளிவர்க்கத்தின் உதவியின்றி, இன்று வரையில் எவ்வித முன்முயற்சியும் காட்டவில்லை. ஏன்? ஏனெனில் குட்டி பூர்ஷ்வாக்கள் ஒரு வர்க்கமாக வளர்ந்துகொண்டிருக்கவில்லை. மாறாக, அது பூர்ஷ்வாக்கள் என்றும் பாட்டாளிகள் என்றும் ஒவ்வொரு நாளும் சிதறுண்டுகொண்டும் உடைந்துகொண்டும் இருக்கின்றது. மற்றொருபுறம், இங்கே வறுமை என்பது தீர்மானிக்கும் முக்கிய காரணியாக இருக்கவில்லை. குட்டி பூர்ஷ்வாக்களைவிட "நாடோடிகள்" வறுமையானவர்கள்தான். ஆனால் "இரஷ்யாவை விடுவிக்கும்" கடமையை அவர்கள் மேற்கொள்வார்கள் என எவரும் கூறமாட்டார்கள்.

இன்று எந்த வர்க்கம் பெரும்பான்மையைக் கொண்டிருக்கிறது அல்லது எந்த வர்க்கம் மிகவும் ஏழையாக இருக்கிறது என்பது விஷயமல்ல. ஆதலால், எந்த வர்க்கம் பலமடைந்துகொண்டிருக்கின்றது என்பதும் எந்த வர்க்கம் சிதைந்து கொண்டிருக்கின்றது என்பதும்தான் விஷயமாகும்.

மேலும் படிப்படியாக வளர்ந்துகொண்டிருக்கும், பலமடைந்துகொண்டிருக்கும் ஒரே வர்க்கமாக பாட்டாளிவர்க்கம் இருப்பதால், அது சமூக வாழ்வை முன்னோக்கிக் கொண்டு சென்றுகொண்டும் அனைத்து புரட்சிகர சக்திகளையும் அதனைச்சுற்றி அணிதிரட்டிக்கொண்டு சென்றுகொண்டிருப்பதால், அதனை இன்றைய இயக்கத்தின் பிரதான சக்தியெனக் கருதுவதும், அதன் அணிகளில் ஒன்றுசேர்வதும், அதன் முற்போக்கான முயற்சிகளை நமது முயற்சிகளாக மாற்றுவதும் நமது கடமையாகும்.

இவ்வாறாகத்தான் அதற்கு மார்க்சிஸ்டுகள் பதிலளித்தனர்.

தெளிவாகவே மார்க்சிஸ்டுகள் வாழ்க்கையை இயக்கவியல் ரீதியாகப் பார்த்தனர். அதே சமயம் நரோட்னிக்குகள் வாழ்க்கையை மாறாநிலை பாட்டிலிருந்து (Metaphysically) வாதித்தனர். அவர்கள் சமூக வாழ்க்கை ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் மாறாமல் நிலையாக நின்றுவிட்டதெனக் கூறினர்.

இயக்கவியல் முறையானது வாழ்க்கை வளர்ச்சியை இவ்வாறுதான் பார்க்கின்றது.

ஆனால் போராட்டங்கள் பலவகைப்பட்டதாக இருக்கிறது. பாட்டாளிவர்க்கம் தலைநிமிர்ந்து நின்றது. "டிசம்பர் நாட்களில்" சமூக வாழ்வில் போராட்டம் என்பது இருந்தது. ஆயுதக் கிடங்குகளைத் தகர்த்து பிற்போக்குவாதத்தின் மீது ஓர் தாக்குதல் தொடுத்தது. ஆனல், அதற்கு முந்தைய வருடங்களில் பாட்டாளிவர்க்கம் "அமைதியான"

தொடர்ச்சி 6ம் பக்கம்

## பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்

# ஸ்டாலின் 65வது நினைவுதினம்




**மார்ச் 5, 2018 தேனியில் நடைபெற்ற ஸ்டாலின் நினைவுதினக் கூட்டத்தில் தோழர் ரெங்கசாமி, மாநிலச் செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உரையாற்றுகிறார்**




**மார்ச் 5, 2018 சென்னையில் நடைபெற்ற ஸ்டாலின் நினைவுதினக் கூட்டத்தில் தோழர் சந்திரன், சென்னை மாவட்ட அமைப்புக் கமிட்டி உறுப்பினர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உரையாற்றுகிறார்**

# இயக்கவியல் முறை . . .

5ம் பக்கத் தொடர்ச்சி

வளர்ச்சி சூழ்நிலையின்கீழ், தனிப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டங்கள் மட்டும் இருந்ததையும், சிறு தொழிற்சங்கங்கள் அமைப்பது என்ற அளவில் மட்டும் இருந்ததையும் சமூகப் போராட்டம் என்று அழைத்ததாக வேண்டும்.

தெளிவாகப்பார்த்தால், போராட்டம் பல்வேறு வடிவங்களில் இருக்கிறது.

ஆக, போராட்டம் என்பது இரண்டு வடிவங்களைக் கொண்டிருக்கிறது என இயக்கவியல் வழிமுறை கூறுகிறது. ஒன்று பரிணாம வளர்ச்சிப் போராட்டம். மற்றொன்று புரட்சிகரப் போராட்டம்.

முற்போக்கு சக்திகள் தன்னெழுச்சியாக அவைகளின் தினசரி செயல்பாடுகளைத் தொடர்கையில், பழைய சமூக அமைப்பினுள் சிறு அளவுரீதியான மாற்றத்தை அறிமுகப்படுத்துகையில், போராட்டம் என்பது பரிணாம வளர்ச்சித்தன்மைகொண்டதாக இருக்கிறது.

அதே முற்போக்கு சக்திகள் ஒன்றிணைந்து, ஒரே கருத்தினடிப்படையில் உந்தப்பட்டு, பழைய சமூக அமைப்பை வேரோடழிக்கும் நோக்கத்தில் எதிரிகள் மீது தாக்குதல் தொடுத்து, ஒரு புதிய சமூக அமைப்பை நிறுவுவதற்காக வாழ்க்கையில் குணரீதியிலான மாற்றங்களை அறிமுகப்படுத்துகையில் போராட்டம் என்பது புரட்சிகரமானதாக இருக்கிறது.

பரிணாம வளர்ச்சியானது புரட்சிக்காக தயார்படுத்தி, அதற்கான களத்தை ஏற்படுத்துகிறது. புரட்சியானது பரிணாம வளர்ச்சியின் செயல் முறைப்போக்கை நிறைவு செய்வதுடன், அதன் பிந்தைய செயல்பாட்டிற்கு உதவிபுரிகிறது.

இதே செயல்முறைப்போக்கு இயற்கையில் நிகழ்கின்றது. இயக்கவியல் வழிமுறையே ஒரு உண்மையான விஞ்ஞானபூர்வ வழிமுறை என்பதை விஞ்ஞான சரித்திரம் காண்பிக்கிறது. வானியல் முதல் சமூகவியல் வரை, ஒவ்வொரு களத்திலும் இப்பிரபஞ்சத்தில் எதுவும் நிரந்தரமானதல்ல, அனைத்தும் மாறிக்கொண்டிருக்கின்றன, அனைத்தும் வளர்ச்சியடைந்துகொண்டிருக்கிறது என்ற கருத்து உறுதிப்படுத்தப்படுவதை நாம் பார்க்கிறோம். இதன் காரணமாக, இயற்கையில் காணப்படும் அனைத்தையும் இயக்கம், வளர்ச்சி எனும் கண்ணோட்டத்தில் பார்த்திட வேண்டும். மேலும் இதன் பொருள், இயக்கவியலின் உத்வேகம் இன்றைய விஞ்ஞானம் முழுவதிலும் ஊடுருவியுள்ளது என்பதாகும்.

போராட்ட வடிவங்களைப் பொருத்தமட்டில், இயக்கவியலின்படி சிறு அளவுரீதியிலான மாற்றங்கள் உடனடியாகவோ அல்லது பின்னரோ மிகப்பெரும் குணரீதியிலான மாற்றத்திற்கு இட்டுச் செல்லும் என்பது உண்மையாக இருப்பதால், இந்த விதியானது இயற்கை சரித்திரத்தில் சம முக்கியத்துவத்துடன் பொருந்துகிறது. மெண்டலேயேவ்–ன் "தனிமங்களின் கால அட்டவணை முறை" (Periodic System of Elements) இயற்கை வரலாற்றில் அளவுரீதியிலான மாற்றங்களிலிருந்து குணரீதியிலான மாற்றங்கள் தோன்றுகின்றன என்பது எவ்வளவு மிக முக்கியமானது என்பதைத் தெளிவாகக் காண்பிக்கின்றது. . .

பிரட்ரிக் எங்கெல்ஸ் அவர்கள் தனது டூரிங்குக்கான மறுப்புரையில் (Anti-Duhring) போதுமான அளவில் மிகத்தெளிவாக விளக்கியிருப்பதால் நாம் இப்போது வேறு உண்மைக்குள் செல்ல வேண்டியதில்லை.

இயக்கவியல் முறையின் உள்ளடக்கம் இதுதான் . . . இவ்வுலகில் எதுவும் நிலையானதல்ல என்பதையும் இவ்வுலகில் இருக்கும் அனைத்தும் நிலைத்தில்லாமல், மாறக்கூடியது என இயக்கவியல் நமக்குக் கூறுகிறது. இயற்கை மாறிக்கொண்டிருக்கிறது, சமூகம் மாறிக்கொண்டிருக்கிறது, பழக்க வழக்கங்கள் சம்பிரதாயங்கள் மாறுகின்றன, நீதி பற்றிய கோட்பாடுகள் மாறுகின்றன, உண்மையே மாறுகின்றது. இதனால்தான் இயக்கவியல் அனைத்தையும் நுணுக்கமாகப் பார்க்கின்றது. இதனால்தான் இறுதியான நிரூபிக்கப்பட்ட உண்மை என ஒன்று இருப்பதை அது மறுக்கிறது. இதன் காரணமாக, அது "ஒருகாலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட, வெறுமனே மனதார நம்பப்பட்ட வறட்டுவாத முன்மொழிவுகளை" நிராகரிக்கவும் செய்கின்றது. (பார்க்க, பிரட்ரிக் எங்கெல்ஸ், லுத்விக் ஃபியர்பாக்)

இருப்பினும், மாறா நிலைபாடு (Metaphysics) முற்றிலும் வேறான ஒன்றை நமக்குக் கூறுகின்றது. அதன் கருத்துப்படி, இவ்வுலகு ஏதோ நிரந்தரமான, மாற்றமுடியாத ஒன்று, (பார்க்க, பிரட்ரிக் எங்கெல்ஸ், டூரிங்குக்கான மறுப்புரை) இதனை யாரோ ஒருவர் அல்லது ஏதோ ஒன்று அறுதியிட்டு தீர்மானித்துள்ளது என்பதாகும். இதனால்தான் மாறாநிலைவாதிகள் (Metaphysicians) "மாறாத நீதி" அல்லது "மாற்றமுடியாத உண்மை" என்ற கருத்தைக் எப்பொழுதும் உச்சரித்துக்கொண்டிருக்கின்றனர். . .

மாறாநிலைவாதம் பல்வேறு தெளிவற்ற வறட்டுவாதங்களை அங்கீகரிக்கிறது. உதாரணமாக, "அறிந்துகொள்ள முடியாத" "பொருளின் உண்மை நிலை" போன்றவற்றை அங்கீகரிப்பதுடன் காலப்போக்கில் வெற்று சமயவியலுக்குச் (Theology) சென்றுவிடுகிறது. புரூதான், ஸ்பென்சர் ஆகியோரது கருத்துக்களுக்கு மாறுபட்டு, எங்கெல்ஸ் அவர்கள் இயக்கவியல் வழிமுறையின் உதவியுடன் இத்தகைய வறட்டுவாதங்களை எதிர்த்தார். (பார்க்க, லுத்விக் ஃபியர்பாக்) ஆனால், அராஜகவாதிகளான புரூதான் மற்றும் ஸ்பென்சர் ஆகியோரின் சீடர்கள், புரூதானையும் ஸ்பென்சரையும் விஞ்ஞானிகள் எனவும், அதேசமயம் மார்க்ஸை, எங்கெல்ஸை மாறாநிலைவாதிகள் எனவும் நம்மிடம் கூறுகின்றனர்!

ஹெகலின் தத்துவார்த்தமுறை, மாற்றமுடியாதது எனும் கருத்தைக் கொண்டிருப்பதால், அது தொடக்கத்திலிருந்து முடிவு வரை மாறாநிலைவாதமாக இருக்கின்றது என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆனால், ஹெகலின் இயக்கவியல் முறையானது, மாற்றமுடியாதது என்கின்ற கருத்துக்கள் அனைத்தையும் நிராகரிப்பதால், அது தொடக்கத்திலிருந்து முடிவு வரை விஞ்ஞானபூர்வமாகவும் புரட்சிகரமானதாகவும்கூட இருக்கிறது என்பது தெளிவு.

இதன்காரணமாகத்தான் காரல் மார்க்ஸ் அவர்கள், ஹெகலின் மாறாநிலைவாத அமைப்பு முறையை மிகக்கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாக்கினார். அதே சமயம், அவரது இயக்கவியல் முறையை பாராட்டினார். "அதன்மீது எதையும் நாம் திணிக்க வேண்டாம், அது அதன் சாராம்சத்தில் நுணுக்கமானதும் புரட்சிகரமானதும்" ஆகும் என அதனை மார்க்ஸ் கூறினார். (பார்க்க மூலதனம் தொகுதி1, முன்னுரை )

இதனால்தான் எங்கெல்ஸ் அவர்கள், ஹெகலின் வழிமுறைக்கும் (Method) முறைக்குமிடையே (System) ஒரு பெரிய வேறுபாடு இருப்பதைக் கண்டார். "எவரெல்லாம் ஹெகலின் முறை மீது பிரதான அழுத்தம் கொடுக்கின்றனரோ அவர்களெல்லாம் இரண்டு களத்திலும் முற்றிலும் பழைமைவாதிகளே. எவரெல்லாம் அவரது இயக்கவியல் வழிமுறையை முக்கியமான விஷயம் எனக் கருதுகிறார்களோ அவர்களெல்லாம் அரசியலிலும் சமயத்திலும் மிகவும் தீவிர எதிரணியைச் சேர்ந்தவர்களாக இருக்க முடியும்" (பார்க்க. லுத்விக் ஃபியர்பாக்)

ஒரே நேரத்தில் ஒரு விஷயம் நல்லதாகவும் தீயதாகவும் இருக்க முடியுமா? அதாவது "தந்திரவாதம்" "வார்த்தை வித்தைகள்" மூலம் "நீங்கள் உண்மையையும் பொய்மையையும் சமமாகப் பாவித்து நிரூபித்திட விரும்புகிரீர்களா"!. . . என்பதை அது காண்பிக்கிறது.

இருப்பினும், நாம் இவ்விஷயத்தின் சாராம்சத்தினுள் செல்வோம்.

இன்று நாம் ஒரு ஜனநாயகக் குடியரசைக் கோருகிறோம். ஒரு ஜனநாயகக் குடியரசு என்பது அனைத்து அம்சங்களிலும் நல்லதா, அல்லது அனைத்து அம்சங்களிலும் கெட்டதா என நாம் கூற முடியுமா? முடியாது. ஏன்? ஏனெனில், ஒரு ஜனநாயகக் குடியரசு ஒரு அம்சத்தில் நல்லதாக இருக்கிறது: நிலப்பிரபுத்துவ அமைப்பை அழித்தொழிக்கிறது. ஆனால் மற்றொரு அம்சத்தில் இது கெட்டதாக இருக்கிறது: அது பூர்ஷ்வா அமைப்பை பலப்படுத்துகிறது. எனவேதான் அந்த ஜனநாயக அமைப்புமுறை நிலப்பிரபுத்துவ அமைப்புமுறையை அழித்தொழிக்கும் வரையில் அது நல்லது. அதனால் அதற்காக நாம் போராடுகிறோம். ஆனால் பூர்ஷ்வா அமைப்புமுறையை அது பலப்படுத்திக்கொண்டிருக்குவரை அது கெட்டது. அதனால் அதனை நாம் எதிர்த்துப் போராடுகிறோம் என நாம் கூறுகிறோம்.

ஆக, ஜனநாயகக் குடியரசு ஒரே நேரத்தில் "நல்லதாகவும்" "கெட்டதாகவும்", "ஆம்" மற்றும் "இல்லை" என்பதாகவும் இருக்க முடியும். . . மேலே மேற்கோள்காட்டிய சொற்களில் இயக்கவியல் முறையை குணாம்சப்படுத்துகையில் எங்கெல்ஸ் அவர்கள் இத்தகைய வகை உண்மைகளைக் அவரது சிந்தனையில் கொண்டிருந்தார். . .

மார்க்ஸ் அவர்கள் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

அவற்றின் வளர்ச்சியின் ஒரு கட்டத்தில், சமூகத்தின் பொருளாதய உற்பத்தி சக்திகள் (Material Productive Forces) இருக்கின்ற உற்பத்தி உறவு களுடன் மோதலைச் சந்திக்கிறது, அல்லது சட்டப்படி சொத்துடமை உறவுகளில். . . . பின்னர் தான் சமூகப் புரட்சியின் மற்றுமொரு சகாப்தம் துவங்குகிறது. ஆனால், "அனைத்து உற்பத்தி சக்திகளும் வளர்ச்சியடைவதற்கான வாய்ப்பு இருக்கையில் அனைத்து உற்பத்தி சக்திகளும் வளர்ச்சியடையும்வரை எந்த சமுதாய அமைப்பும் ஒருபோதும் அழியாது. . ."

(பார்க்க. காரல் மார்க்ஸ், அரசியல் பொருளாதார ஆய்வுக்கட்டுரைக்கான ஒரு வழங்கல். முன்னுரை)

மார்க்ஸின் இந்த ஆய்வறிக்கையை நவீன சமூக வாழ்வில் பிரயோகித்துப்பார்த்தால், இன்றைய உற்பத்தி உறவுகளுக்கிடையில், குணாம்சத்தில் சமூகமாக இருப்பதையும், உற்பத்திப் பொருளைக் கைப்பற்றும் வடிவம் குணாம்சத்தில் தனியுடைமையாக இருப்பதையும், அங்கே காணப்படும் அடிப்படை மோதலானது சோஷலிசப் புரட்சியில் சென்று முடிந்தாகவேண்டும் என்பதையும் நாம் பார்க்கலாம். (பார்க்க பிரெட்ரிக் எங்கெல்ஸ், டூரிங்குக்கு மறுப்பு, பாகம் 3, தொகுதி 2)

மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸின் கருத்துப்படி, புரட்சியானது "தெரியாத காரணங்களால்" உருவாவதில்லை . . . ஆனால், "உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி" எனும் மிக நிச்சயமான, பிரதான காரணங்களால் உருவாகின்றது.

மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸின் கருத்துப்படி, உற்பத்தி சக்திகள் போதுமான அளவில் வளர்ச்சியுறும்போது மட்டுமே புரட்சி வரும் . . . (அராஜகவாதமா அல்லது சோசலிசமா – தேர்வு நூல்கள், தொகுதி 1) ■

# பணபலம், ஆள்பலத்தால் தற்போது தேர்தல் . . .

4ம் பக்கத் தொடர்ச்சி

ஏறக்குறைய 30சதவீத உறுப்பினர்கள் மீது ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட கிரிமினல் வழக்குகள் பதியப்பட்டுள்ளன. இவர்களில் பாதி பேர்மீது கொலை, கொலை முயற்சி, மிரட்டி பணம்பறித்தல், கற்பழிப்பு, வழிப்பறி, கடத்தல் போன்ற கொடூர குற்றம் புரிந்தவராக இருப்பது மிகவும் வருத்தமளிப்பதாகவுள்ளது. இக்குற்றங்களின் சதவீதம் இன்னும் கூடுதலாக இருக்கும் என்பதை சிவில் மற்றும் போலீஸ் அதிகாரிகளுடன் கூட்டம் நடத்தியதன் போக்கில் நான் கண்டுகொண்டேன், ஏனெனில் பல வழக்குகள் சத்தமின்றி முடிக்கப்பட்டன அல்லது உள்ளூர் அடியாள் அல்லது அரசியல்வாதிகளுக்குச் சாதகமாகவே அவ்வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டதாக எனக்கு சொல்லப்பட்டது. 1980கள் வரை, தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் வேட்பாளர்கள் தங்களை "பாதுகாப்பார்கள்" என்ற எண்ணத்தில் பல மாஃபியாக்கள் அத்தகைய வேட்பாளர்களை வெளியிலிருந்து ஆதரித்தனர். அதன் பின்னர், இத்தகைய மாஃபியாக்கள் காலப்போக்கில் தேர்தல்களில் தாங்களே போட்டியிடலாம் எனத் தீர்மானித்திருக்கிறார்கள்.

(26.12.2017 தேதிய இந்துஸ்தான் டைம்ஸில் வெளியிடப்பட்ட 16வது இந்திய தலைமை தேர்தல் ஆணையராக இருந்த நவீன் சாவ்லா அவர்களால் "ஆள்பலம், பணபலத்தின் புனிதமற்ற கூட்டணி இந்திய ஜனநாயகத்தை பலகீனப்படுத்துகிறது" எனும் தலைப்பிடப்பட்ட கட்டுரையிலிருந்து ஒரு பகுதி) ■

## உலகை உலுக்கும் கேள்விகள்

# ஐரோப்பாவிலும் பிரிவினைவாத, பிளவுவாத சக்திகளின் அபாயகரமாக பெருக்கம்

ஐரோப்ப கண்டம் சமீபத்தில் தொடர்ச்சியான அதிர்வலைகளால் அதிர்ந்துள்ளது. அது இரு–முகப் பிரச்சினையை சந்தித்துக்கொண்டிருக்கிறது. ஒருபுறம் அடுத்தடுத்த பொருளாதார, அரசியல், சமூக நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்காக ஆட்சியாளர்கள் சுரண்டல் பொருளாதார ஒடுக்குமுறைகளைக் கையாள்வதோடு, மேலும் மேலும் அதிகாரத்தைத் தங்கள் கைவசம் குவித்து வருகின்றனர். மற்றொருபுறம் பெருகிவரும் இந்த நெருக்கடியின் விளைவாக அதிவேகமாக பிரிவினைவாத, பிளவுவாதப் போக்குகள் அபாயகரமாகப் பெருகிவருகிறது. ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகத் தென்படும் இந்த இரண்டுமே மக்களை கடுமையாகச் சுரண்டும், ஒடுக்கும் ஒரே செயல்முறைப்போக்கின் அம்சங்களாகும்.

இதன் காரணமாக, ஏற்கனவே வாழ்க்கையையே அச்சுறுத்தும் கடுமையான பொருளாதார அடக்குமுறையால் பாதிக்கப்பட்டுள்ள பல ஐரோப்பிய நாட்டு மக்கள் தங்களுக்குள் ஒற்றுமையின்றி பிரிவினைவாத, பிளவுவாத,தேசவேற்றுமை உணர்வால் பீடிக்கப்பட்டுள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன்பு, பிரிட்டனிலிருந்து ஸ்காட்லாந்தைப் பிரிக்கவேண்டும் என்ற பிரிவினைப் போராட்டம் பெரிய அளவில் நடைபெற்றது. பொதுக் கருத்து வாக்கெடுப்பில் சிறிய அளவு வாக்கு வித்தியா சத்தில்தான் அதனை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் முறியடித்தனர். ஸ்காட்லாந்து பிரிட்டனோடு தொடர்ந்து உள்ளது, ஆனால் இப்பிரச்சினை இன்னமும் இருந்துகொண்டுதானிருக்கின்றது.

ஸ்பெயினில், கதலோனியா பாராளுமன்றம் கதலோனியா சுதந்திரத்திற்கான, அதாவது கதலோனிய சமுதாயத்தின் தன்னாட்சியான சுதந்திரத்திற்கான வாக்கெடுப்பிற்கு அனுமதி வழங்கியுள்ளது. அதனைத் தொடர்ந்து பிரம்மாண்ட ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. அதை அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமானது, சட்டவிரோதமானது என்று அறிவித்துள்ள ஸ்பெயின் அரசாங்கம் அப்போராட்டங்களை மூர்க்கத்தனமான பலப்பிரயோகம் செய்து அடக்கியது. இந்த பிரிவினைவாத நடவடிக்கையை ஸ்பெயினின் பாராளுமன்ற அரசியல் கட்சிகள் எதிர்த்ததோடு அதற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையும் நடத்தின. ஆனால் ஒற்றுமையின்மை, பிளவுவாத மனப்பான்மையை ஸ்பெயின் மக்கள் இன்னமும் சுமந்துகொண்டு இருக்கின்றனர் என்பதே உண்மையாகும்.

சில பத்தாண்டுகளுக்கு முன்புவரை வலுவான ஒன்றுபட்ட நாடாக இருந்த யூகோஸ்லேவியா பிரிவினைவாதிகளால் தகர்க்கப்பட்டு தற்போது சிறு சிறு பலவீனமான நாடுகளாகச் சிதறுண்டு விட்டது. அவை எல்லாமே தற்போது ஐரோப்பிய அல்லது அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் நவீன காலனியாதிக்கச் சுரண்டலுக்கான விளைநிலமாகி விட்டன. பிரிவினைவாத இயக்கங்கள் ஏதும் நடைபெறாத நாடுகளில்கூட இதே மனப்பான்மை மக்களைப் பீடித்து மக்கள் பிளவுற்றுள்ளனர்.

ஆஸ்த்ரியா, நெதர்லாந்து, ஜெர்மனி, பிரான்சு, ஹங்கேரி அல்லது இதர கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைவர்களை அனுமதிப்பதா கூடாதா என்பது குறித்த பிரச்சினைகள், உதாரணமாக, கிரீஸ் மற்றும் இத்தாலியிலிருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொது நாணயமான யூரோவைத் தொடர்வதா வேண்டாமா என்ற பிரச்சினை, மேலும் ஐரோப்பிய யூனியனில் தொடர்வதா வேண்டாமா என்ற பிரச்சினைகளும் கூட, பிரிட்டன் உள்ளிட்ட பல நாடுகளில் தூண்டப்பட்டுள்ளது. இதில் பிரிட்டனில் பிரெக்சிட் கருத்துக்கேட்டு வாக்கெடுப்பே நடைபெற்றது. ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிவதற்கான வரிசையில் மேலும் பல நாடுகள் உள்ளன. இதில் பல நாடுகளில் வலதுசாரி பிற்போக்கு சக்திகள், நாசி ஆதரவு அடையாளம் போன்ற பிரச்சினைகளை, குருட்டுத்தனமான தேசிய வெறிவாதத்தை, அல்லது மற்றவர்களிடமிருந்து தனித்திருக்க வேண்டும் என்பன போன்ற பிரச்சினைகள் தூண்டிவிடப்பட்டு அது பிரிவினைவாத பிளவுவாத போக்குகள் அதிகரிக்குமளவிற்கு சென்றுள்ளது. இதுபோன்ற நோய்கள் ஐரோப்பாவில் மட்டுமல்ல, ஜனநாயகத்தின் ஜாம்பவான் என்று கூறிக்கொள்ளும் அமெரிக்காவிலும்கூட அமெரிக்க தனித்துவவாதம் போன்ற முழக்கங்களும் கர்வங்களும் எழுகின்றன. இனவெறியோடு கொடூரமான கொலைகளும் நடக்கின்றன, அதுவும் அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சியாளர்களாலேயே தூண்டிவிடப்படுகின்றன. ஏற்கனவே பாரம்பரியமாக பிரிவினைவாதப் போக்குகளால் பாதிக்கப்பட்டுள்ள ஆசியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்காவின் பல நாடுகளிலும் மத அடிப்படைவாதிகள் வடிவிலோ அல்லது இன அடிப்படையிலோ அல்லது வேறுவிதமான வகையில் பிரிவினைவாத சக்திகள் மீண்டும் புதிதாக தலையெடுத்துள்ளன.

### இன்று சிதிலமடைந்துள்ள ஐரோப்பாதான், ஒன்றுபட்டிருக்கவேண்டும் என்ற அறைகூவலோடு வந்த நவீன நாகரிகத்தின் பிறப்பிடமாகும்

சமீபத்திய, ஆனால் தொடர்ந்து நீடித்துள்ள இந்த ஒற்றுமையின்மையும் பிரிவினைவாதமும், அதிலும் குறிப்பாக ஐரோப்பாக் கண்டத்திலுள்ள நாடுகளில் ஏன் மீண்டும் உருவாகிறது என்ற கேள்வி இயற்கையாகவே எழுகிறது. இதே ஐரோப்பாக் கண்டத்தின் பல நாடுகள்தான் ஒட்டுமொத்த உலகிற்கும் விளக்கேற்றிய ஜனநாயகப் புரட்சியின் பிறப்பிடமாக, மறுமலர்ச்சியின் பிறப்பிடமாக இருந்ததை மனித நாகரிகம் கண்டது. அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக நிலப்பிரபுக்களிடையேயும் அரசர்களிடையேயும் தொடர்ச்சியான மோதல்கள், சண்டைகளும் போர்களும் நடைபெற்றதால் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு நிலப்பிரபுத்துவம் தடையாக இருந்த காலமது. இவையும், அதோடு நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் பின்னிப் பிணைந்திருந்த குறுகிய பிளவுவாதம், பிற்போக்குவாதம், மத வெறி, பல்வேறு மத காவியங்களில் கூறப்பட்ட மூடநம்பிக்கை எண்ணங்கள் மக்களைப் பிரித்து வைத்திருந்தன. ஆனால் சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்த இவற்றை எல்லாம் அன்று புதிதாக உதித்திருந்த வர்க்கமான பூர்ஷ்வா வர்க்கம் தங்களால் இயன்ற அளவு வேரறுத்து தூக்கியெறிந்து, நிலப்பிரபுத்துவ மன்னராட்சி சர்வாதிகாரத்தை உடைத்து, ஒரு புதிய சமூக ஒழுங்கை ஏற்படுத்துவதற்காக நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராக உக்கிரமான போராட்டத்தை நடத்தினர். எனவேதான் 'சமத்துவம் – சுதந்திரம் – சகோதரத்துவம்' என்ற முழக்கங்களை எழுப்பினர். ஆயிரத்தோரு பிரிவினைவாத கருத்துக்களால் பிளவுற்றிருந்த மக்களை ஒரு நவீன தேசங்களாக ஒன்றுபடுத்தினர். தேசிய இனம் என்ற அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட நாடுகள் அனைத்தும் பொதுமக்களிடையே மதம், மொழி, இடம் என்கின்ற பாகுபாடின்றி ஒரு பொதுவான பிணைப்பை, பொதுவான உணர்வை உருவாக்கின, அது தேசிய உணர்வு வளர்வதற்கான அடித்தளத்தை வழங்கியது. ஆக, அது சட்டத்தின் முன்பாக, அரசின் முன்பாக அனைவருக்கும் சம உரிமைகள், ஜனநாயகம், தனிநபர் சுதந்திரம், போன்ற போற்றத்தக்க கருத்துக்களின் மூலமாக மக்களை ஒன்றுபடுத்தியது. ஆக அப்படி உருவான புதிய சமுதாயம் நவீன விஞ்ஞானத்தின் புதிய மடைக்கதவுகளையும் மனிதகுலத்திற்கு பகுத்தறிவின்மையையும் குருட்டு நம்பிக்கையையும் அடிபணிதலையும் போராடிக் களைவதற்கான மடைக்கதவுகளையும் திறந்து விட்டது. அது ஐரோப்பாவோடு மட்டும் நின்றுவிடவில்லை. உதாரணத்திற்கு ஜனநாயகத்தை 'மக்களால், மக்களுக்காக, மக்களின்' என்று வரையறுத்ததன் மூலமாக அட்லாண்டிக்கின் மறுபுறத்திலும், அமெரிக்காவிலும் இதே உணர்வுகள் எதிரொலித்தன.

### புதிதாக உருவெடுத்த முதலாளித்துவப் பொருளாதாரத்திற்கு அடிமைகளின் விடுதலையும், தேசிய சந்தைகளை ஒன்றுபடுத்துவதும் தேவைப்பட்டது

அது நவீன விஞ்ஞானத்தின் தொழில்நுட்பத்தின் உதவியுடனான, இறுதியாக தொழிற்புரட்சியின் உதவியுடனான முதலாளித்துவத்தின் ஒரு வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இட்டுச்சென்றது. கைவினைத் தொழில்களுக்கு மாற்றாக நவீன தொழிற்சாலைகள் வந்தன. அதற்காக மனிதனின் உற்பத்தித் திறனை மேம்படுத்தப்படுவதும், இயற்கையின் மீது ஆதிக்கம் செலுத்தும் திறமையும் மக்களை தொழிற்சாலைகளில் பணிசெய்யவைக்க வேண்டிய அவசியமும் முதலாளித்துவத்திற்குத் தேவைப்பட்டது. இவ்வாறாக, நிலப்பிரபுத்துவ அமைப்புமுறையின் பிடிகளிலிருந்து பண்ணையடிமைகளை விடுவித்திட, முதலாளித்துவவாதிகள் தனிநபர் சுதந்திரம், தன் சொந்த வாழ்க்கை முறையையும் வாழ்க்கையையும் ஒருவர் தானே தீர்மானித்துக்கொள்வது என்ற அறைகூவலை உக்கிரமாகவும் தீவிரமாகவும் எழுப்பினர்.

குறிப்பிட்ட புவி எல்லைகளைக்கொண்டு புதிதாக உருவாக்கப்பட்ட நவீன தேசங்கள், தேசியவாதம் எனும் பொதுவான பந்தத்தின் அடிப்படையில் ஒன்றிணைக்கப்பட்ட மக்களின் புதிய உழைப்புசக்தியை வழங்கின. ஜனநாயக தேசிய அரசுகள் விவசாயம், கைவினைப் பொருட்கள் உற்பத்தி அடிப்படையிலான சிறிய நிலப்பிரபுத்துவ பொருளாதாரங்களை சேர்த்து ஒன்றிணைத்து தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறுவிதமான பொருட்களின் அதிகமான வரவுக்கு ஏற்ற பெரிய சந்தையை ஏற்படுத்தின. அவ்வாறு உருவாக்கிய கட்டமைப் பின்மீது புதிய வகையான நாகரிகத்தை, பூர்ஷ்வா சமுதாயத்தை, முதலாளித்துவ அரசைக் கட்டியெழுப்பியது. புதிதாக வளர்ந்துவந்த முதலாளித்துவங்களுக்கிடையேயான சுதந்திரமான போட்டி அடிப்படையிலான சந்தைப் பொருளாதாரத்தை தொடங்கி வைத்தது. ஆனால் இந்த செயல்முறைப் போக்கு ஏகபோகத்தை உருவாக்கியது. சுரண்டல் அடிப்படையில் இயங்கிய அது, வெகுஜனங்களை தொடர்ந்து வறுமைக்குள்ளாக்கி அதன் விளைவாக உள்நாட்டில் சந்தை நெருக்கடியை சந்தித்தது. தேசிய எல்லையைத் தாண்டி வெளியே சந்தையைத் தேடும் நிலைக்கு முதலாளித்துவவாதிகள் வந்தனர். எனவே முதலாளித்துவவாதிகள் உலகம் முழுவதும் பரவினர், காலனிகளை உருவாக்கினர், அதன்மூலம் தங்கள் சந்தைகளை விரிவுபடுத்த முயன்றனர்.

### முதலாளித்துவம் காலாவதியாகிப்போன இன்றைய காலகட்டத்தில் பூர்ஷ்வாக்கள் தங்களது சமரசமற்ற போர்க்குணத்தை இழந்துவிட்டனர்.

இவற்றில் பெரும்பாலான காலனிகள் ஆசியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா போன்ற பிராந்தியங்களில் இருந்தன. அங்கிருந்த நிலப்பிரபுக்கள், காலனியாதிக்க ஆட்சியாளர்கள் சேர்ந்துகொண்டனர். பின்னாளில் இந்த காலனியாதிக்க ஆட்சியாளர்கள் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களாகவும் மாறினர். அந்த காலனி நாடுகளும் காலனியாதிக்க எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தியதன் போக்கில் ஒரு தேசம் உருவாகும் போக்கு வளர்ந்தது. ஆனால் இந்தப் போராட்டங்கள் எல்லாம் முதலாளித்துவம் காலாவதியான காலகட்டத்தில், அதாவது ஏகபோகம், ஏகாதிபத்திய காலகட்டத்தில் நடைபெற்றன. ஆனால் ஆரம்ப காலத்தில் நிலப்பிரபுத்துவத்திற்கு, மன்னராட்சிக்கு எதிரான தங்களது போராட்டத்தில் தாங்கள் காட்டிய சமரசமற்ற நெஞ்சுறுதியையும் உக்கிரத்தையும் இந்த காலகட்டத்தில் பூர்ஷ்வா ஒரு வர்க்கமாக பராமரித்திட முடியவில்லை. மாறாக படிப்படியாக வளர்ந்துவந்த உழைக்கும் வர்க்கத்தின் புரட்சிகர இயக்கத்தைக்கண்டு அஞ்சியதன் காரணமாக நிலப்பிரபுத்துவத்துடனும் ஏகாதிபத்தியத்துடனும் சமரச அணுகுமுறையை பூர்ஷ்வா வர்க்கம் கடைபிடித்தது. காலனி நாடுகளில் எங்கெல்லாம் அந்தந்த நாட்டு பூர்ஷ்வாக்கள் தலைமையில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்றதோ அங்கெல்லாம் அத்தகைய தலைமைகளில் இந்த சமரசப் போக்கு அப்பட்டமாக வெளிப்பட்டது.

தொடர்ச்சி 8ம் பக்கம்

## உலகை உலுக்கும் கேள்விகள்

# பிரிவினைவாதத்தை தூண்டி மக்கள் ஒற்றுமையை குலைக்கும் ஏகாதிபத்தியம்–முதலாளித்துவம்

7ம் பக்கத் தொடர்ச்சி

இந்த தேசிய பூர்ஷ்வா வர்க்கம் அதிகாரத்தை தங்கள் கைகளில் கொண்டுவருவதற்காக ஏகாதிபத்தியத்தோடும் நிலப்பிரபுத்துவத்தோடும் சமரசம் செய்துகொண்டது. எனவே இந்த காலனிநாடுகளில் உருவான தேசங்களில் நிலப்பிரபுத்துவத்திலிருந்து மிச்ச சொச்சமாக மக்களிடம் இருந்த மதம், மொழி, இனப் பகைமை, சாதி வெறி போன்ற இன்னபிற குறுகிய பிளவுவாத எண்ணங்களும் அணுகுமுறையும் தொடர்ந்து இருந்து கொண்டிருந்தது. புதிய ஆட்சியாளர்களான முதலாளித்துவவாதிகள் மக்களைப் பிரித்தாளுவதற்கும் ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டிருக்கவைப்பதற்கும் இத்தகைய குணங்களையும் கூடப் பயன்படுத்தினர்.

### தீர்க்க இயலாத சந்தை நெருக்கடியிலிருந்தும் மந்தநிலையிலிருந்தும் முதலாளித்துவம் மீள முடியாமல் தவிக்கிறது

மற்றொருபுறம், நிலப்பிரபுத்துவத்திற்கும் மன்னராட்சிக்கும் எதிராக ஒப்பீட்டளவில் உக்கிரமான சமரசமற்ற போராட்டங்கள் மூலமாகவும் நீண்ட நெடிய மறுமலர்ச்சி கலாச்சார இயக்கங்கள் மூலமாகவும் மேற்கு ஐரோப்பிய, குறிப்பாக மேற்கு ஐரோப்பாவின் முன்னணி முதலாளித்துவ நாடுகள் தங்கள் தேசங்களை வளர்த்தெடுத்தன. அவர்கள் எதிர்பார்த்துப் போராடிய தத்தம்நாட்டு மக்களை ஒருமித்த ஒரு தேசமாக ஒன்றிணைப்பதற்குத் தேவையான செயல்முறைப்போக்கை பெரும்பாலும் பின்பற்றின. தொடர்ந்து இந்த பாரம்பரியமிக்க சக்திவாய்ந்த முதலாளித்துவங்கள் ஏகபோகங்களாக மாறின. ஈவிரக்கமற்ற சுரண்டலில் ஈடுபட்டதால் மக்களின் வாங்கும் சக்தி மேலும் குறைந்தது. இதனால் சந்தை நெருக்கடி மேலும் தீவிரமானது. இந்த நாடுகள் ஏகாதிபத்திய சக்திகளாக மாறி, மற்ற நாடுகளை தங்களுக்கான வெளிநாட்டுச் சந்தைகளாக அடிமைப்படுத்தின.

இறுதியாக, சந்தைகளைக் கைப்பற்றவும் அதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் தங்களுக்குள்ளேயே இரண்டு உலகப்போர்களையும் நடத்தினர். இவை எல்லாமே முதலாளித்துவ ஏகாதிபத்திய அமைப்பு அதன் அழுகிப்போன கட்டத்திற்குள் ஆழமாக சென்றுவிட்டதையே தெளிவாகக் காட்டுகின்றன. அதிகபட்ச லாபமீட்டவேண்டும் என்பதற்காக மக்களை சுரண்டியதன் மூலம், மாறாக கசக்கிப் பிழிந்ததன்மூலமாக, சந்தை நெருக்கடிக்குள் அவர்கள் தாங்களாகவே சிக்கிக்கொண்டனர். அதிலிருந்து மீள்வதற்கு அனைத்துவிதமான முயற்சிகளையும் மேற்கொண்ட போதும் அவர்களால் அந்நெருக்கடியிலிருந்து வெளியே வர முடியவில்லை. உலகப் போர்களும்கூட அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை. மாறாக போருக்குப் பின்பு காலனிநாடுகள் எல்லாம் ஏகாதிபத்திய அதிகாரங்களின் பிடியிலிருந்து நழுவி சுதந்திரமான முதலாளித்துவ நாடுகளாக உருவாயின. இதனால் இவர்கள் தங்களது சந்தைகளை ஏகாதிபத்தியங்களின் நேரடிப் பிடியிலிருந்து விடுவித்தனர். அப்போது ஏகாதிபத்தியங்களின் சந்தைகளை மேலும் சுருக்கும் வண்ணம் வலுவான சோசலிசமுகாமும் உருவானது. சோசலிச முகாம் கலைக்கப்பட்ட பின்பும், நவீன காலனியாதிக்க சுரண்டல் நடைபெற்றபோதிலும், அல்லது உலகமயம் அமல்படுத்தப்பட்ட பின்னரும் சந்தை நெருக்கடியிலிருந்து மீள முடியாமல் முதலாளித்துவங்கள்,ஏகாதிபத்தியங்கள் தவித்து வருகின்றன.

தங்குதடையற்ற சுரண்டலால் முன்னேறிய நாடுகளிலும் கூட மக்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் வாங்கும் சக்தியை இழந்து வருகின்றனர். பலகீனமான நாடுகளில் மக்களின் நிலைமையைக் கேட்கவே வேண்டாம். தொழிற்சாலைப் பொருளாதார வளர்ச்சி முற்றிலும் முடங்கிப்போயுள்ளது. தேக்கம், மந்தநிலை, வேலை இழப்பு, ஆட்குறைப்பு ஆகியவை சேர்ந்து கொண்டு ஏற்கனவே வேலையில்லாப் பட்டாளத்தில் உள்ள கோடிக்கணக்கானவர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்துகிறது. இது மக்களின் வாங்கும் சக்தியை மேலும் பாதிப்பதால் சந்தையை மேலும் சுருக்குகிறது. இந்த சுழற்சி சென்று கொண்டே இருக்கிறது; வெகுசில பலம்வாய்ந்த கார்ப்பொரேட் குழுமங்களுக்கும் அவர்களது ஏகபோக எஜமானர்களுக்கும் அதிகபட்ச லாபத்தை உத்திரவாதப்படுத்துவதற்காக நிவாரணங்கள், நிதி உதவிகள், வரிச் சலுகைகள் போன்றவற்றை செய்யும் ஆட்சியாளர்கள், பொதுமக்களுக்கு சிக்கன நடவடிக்கையை பரிசாக அளித்து எரிகின்ற தீயில் எண்ணெயை ஊற்றுகின்றனர். இந்த நெருக்கடியும் தேக்கநிலையும் முன்னெப்போதும் இல்லாத அளவு கடுமையாக உள்ளது.

### பொதுமக்களிடம் பெருகிவரும் அதிருப்தியை திசை திருப்புவதற்காக ஒருகாலத்தில் தாங்களே புறம்தள்ளிய பிரிவினைவாதத்தையும் பிளவுவாதத்தையும் முதலாளித்துவவாதிகள் தூண்டிவிடுகின்றனர்

இது வேறு வழியின்றி எந்த ஒரு நாட்டிலும் பெருவாரியாக உள்ள மக்களிடம் அதிருப்தியையும் கோபத்தையும் வரவழைத்து எதிர்ப்பையும் உருவாக்குகிறது. ஆளும் ஏகபோகங்கள் ஒவ்வொரு நாளும் தொடுக்கும் ஈவிரக்கமற்ற தாக்குதல்களால் உருவான வாழ்க்கை நிர்ப்பந்தத்தால் அவர்கள் நிம்மதியை இழந்து வாடுகின்றனர். எனவேதான் ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் கூட அவர்களது கொள்கைகளை எதிர்த்து பொதுமக்கள் அவ்வப்போது போராட்டங்களில் குதிக்கின்றனர். அவையெல்லாம் தற்காலிக நிவாரணத்தைக் கூட தரவில்லை. ஆனால் இவையெல்லாம் ஏகபோகங்களுக்கு மட்டுமே சேவகம் செய்யும் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராகவே மக்களின் கோபங்கள் இருப்பதை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

இந்தச் சூழ்நிலையில், மக்களின் கோபத்தை மழுங்கச் செய்வதற்காக ஆளும் வர்க்கமும், ஏகபோகங்களும் அதன் அடிவருடிகளும் ஆயிரத்தோரு வழிமுறைகளைக் கையாண்டுவருகின்றனர். அவர்கள் இருமுனைத் தாக்குதலைத் தொடுக்கின்றனர். ஒருபுறம், அரசியல் பொருளாதார ஒடுக்குமுறை நடவடிக்கைகளை அமல்படுத்துகின்றனர். மற்றொருபுறம், பிரிவினைவாத பிளவுவாத செயல்களைத் தூண்டுகின்றனர். அவர்களின் நோக்கம் தெளிவாகத் தெரிகிறது. அது மக்களை நெருக்கடிக்குள் தள்ளுவது, அடக்குவது, அவர்கள் எதிர்ப்புக் காட்ட முடியாதபடி அவர்களைப் பிரிப்பதுதான். எனவேதான் சில முதலாளித்துவ ஆட்சியாளர்கள் பொதுமக்களின் ஜனநாயக உரிமைகள், ஏன் அடிப்படை உரிமைகளையும், பல பத்தாண்டுகள் விடாப்பிடியாக கஷ்டப்பட்டு போராடிப் பெற்ற மக்களின் சமூக நலத் திட்டங்களையும் பறிப்பதற்காக கருப்புச்சட்டங்களை இயற்றும் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

பிரான்சில் சமீபத்தில் தொழிலாளர் சட்டங்கள் மாற்றப்பட்டது இதற்கு உதாரணம். பல்வேறு முதலாளித்துவ நாடுகளில் ஜனநாயக முகத்திரையைப் பயன்படுத்திக்கொண்டு முதலாளித்துவ ஆட்சியாளர்கள் படிப்படியாக கையளவு ஏகபோகங்களுக்கான பூர்ஷ்வா சர்வாதிகார ஆட்சியை அப்பட்டமாக நடத்தத் தொடங்கியுள்ளனர். இப்படியாக, மக்களின் எதிர்ப்பை முறியடிக்கவும் அவர்களது எதிர்ப்புக் குரலை நெரிக்கவும், தங்களது சுரண்டல் அடக்குமுறை நடவடிக்கையை எவ்விதத் தடையுமின்றி அமல்படுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளனர். உதாரணத்திற்கு, மறுமலர்ச்சியின் கோட்டையாகக் கருதப்பட்ட இத்தாலியில் பிராந்திய அரசாங்கங்களின் அதிகாரத்தை பறித்து, மையத்தில் குவிப்பதற்காக அரசியலமைப்புச் சட்ட சீர்திருத்தம் என்ற ஒன்றைக் கொண்டுவர டிசம்பர் 2016இல் அரசாங்கம் எத்தனித்தது. ஆனால் இதுபோன்ற நடவடிக்கைகளும் ஆட்சியாளர்கள் எதிர்பார்த்தபடி நடப்பதில்லை. இதற்காக நடத்தப்பட்ட பொதுவாக்கெடுப்பில் இதை மக்கள் நிராகரித்ததால் இத்தாலி பிரதமர் பதவி விலக நேர்ந்தது. நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தைக் காட்டிலும் கடன் சுமை அதிகமாக உள்ள கிரீசில் அதன் முதலாளித்துவ ஆட்சியாளர்களும் அடிவருடிகளும் அடிக்கடி கடன் பெறுவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பினராயினர். இதனால் தொழில் நசிந்ததோடு கடுமையான சிக்கன நடவடிக்கையையும் இவர்கள் எடுத்ததால் அது பொதுமக்களை கடுமையான வறுமைக்குள்ளும் உக்கிரமான வேலையின்மைக்குள்ளும் தள்ளியது.

ஆனால் மக்களின் குரலை அடக்குவதற்காகக் கொண்டுவரப்படும் இத்தகைய அரசியல், பொருளாதார அடக்குமுறைகளும்கூட நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு முதலாளித்துவவாதிகளுக்கு உதவவில்லை. எனவே அவர்கள் மற்றுமொரு முனையிலிருந்து தாக்கத் துவங்கியிருக்கின்றனர். இவ்வமைப்பிற்கு எதிராக ஒன்றுபட்டு மக்கள் நிற்காதவகையில் அவர்களைப் ‘பிரித்து ஒற்றுமையை சீர்குலைப்பதற்கு’ முயற்சிக்கின்றனர். முதலாளித்துவ ஏகாதிபத்திய ஒழுங்குதான் தங்களின் உண்மையான பொது எதிரி என்பதை மக்கள் கண்டறியாவண்ணம் மக்களுக்குள்ளேயே ஒருவருக்கெதிராக மற்றொருவரை ஏவிவிடும் அனைத்துவிதமான நச்சுப் பிளவுவாத கருத்துகளைப் பரப்பிவருகின்றனர். அழுகிப்போன கட்டத்திலிருக்கும் முதலாளித்துவவாதிகள் தங்கள் முன்னோர்கள் ஒருகாலத்தில் மறுதலித்த அறிவு பரவலைத்தடுத்தல், சகிப்பின்மை, ரத்தக் களரி மோதல்கள், மத அடிப்படைவாதம், இன்னும் இதுபோன்ற அனைத்தையும் மக்களை நாசப்படுத்துவதற்காக மீண்டும் கொண்டுவந்து பயன்படுத்துகின்றனர். இதன் மூலமாக மக்களை ஒருவருக்கெதிராக மற்றொருவரை சண்டையிடவைக்கின்றனர். இதில் பல்வேறு நாடுகளில் பிராந்திய முதலாளிகள் ஊடுருவி, தேக்கநிலையில், நெருக்கடியில் சிக்கியுள்ள பொருளாதார சூழ்நிலைகளின் காரணமாக ஏற்பட்டுள்ள மக்களின் வறுமையையும் கோபத்தையும் பயன்படுத்திக் கொண்டு தங்களது பொருளாதார அரசியல் நலன்களுக்காகவும் அதிகார வேட்கைக்காகவும் மக்களிடையே பிரிவினைவாதத்தையும் பிளவுவாதத்தையும், ஏன் தனிநாடு வெறியையும் தூண்டிவிடுகின்றனர்.

மேலே குறிப்பிட்ட சில சம்பவங்கள் தவிர, மற்றொரு விஷயத்தையும் சேர்த்துக்கொள்ளலாம். யுஎஸ்எஸ்ஆர் என்ற வலுவான சோசலிச அரசாக ஒருகாலத்தில் ஒன்றுபடுத்தப்பட்ட பல தேசங்கள் தற்போது பல சிறிய முதலாளித்துவ அரசுகளாக சிதறுண்டு கிடக்கின்றன. அவையெல்லாம் அப்பகுதிகளின் பிராந்திய பூர்ஷ்வாகளால் ஆளப்படுகின்றன. தற்போது அந்த நாடுகளிலும் நெருக்கடி அதிகரித்து வருகிறது. இரண்டாம் உலகப்போருக்கு பிந்தைய சூழ்நிலையில் ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவவாதிகள் ஏகாதிபத்தியவாதிகள் ஐரோப்பிய பொதுச் சந்தையை உருவாக்கினர். பின்னர் தங்களுக்கிடையேயான போட்டியை மோதலைக் குறைப்பதற்காகவும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளிடம் பேரம் பேசும் வல்லமையைப் பெறுவதற்காகவும் ஒருங்கிணைந்த ஐரோப்பா போன்ற ஒன்றை உருவாக்குவதற்காக ஐரோப்பியன் யூனியனை உருவாக்கினர். அந்த முயற்சி இப்போது தோல்வியடைந்துகொண்டிருக்கிறது. இதன் பல உறுப்பு நாடுகளின் முதலாளிகள் ஐரோப்பிய யூனியனிலிருந்து வெளியே வரவேண்டும் என்று எண்ணத் தொடங்கிவிட்டனர். பிரெக்சிட் மூலமாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் அதிலிருந்து வெளியேறுவதற்கான நடைமுறையைத் துவக்கிவிட்டனர்.

அதோடு கூடவே, வாய்ப்புக் கிடைக்கும் இடங்களிலெல்லாம், முதலாளித்துவ ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி வட்டார அல்லது பிராந்தியப் போர்களைத் தூண்டுகின்றனர். அந்தப் போர்களில் மக்களை இழுப்பதற்காக போர்வெறி எண்ணத்தை உருவாக்குகின்றனர். ஆயுதங்கள், தளவாடங்கள், நிதி உதவிகள் வழங்கி பல ஆண்டுகளுக்கு போர்களைத் தொடர்கின்றன. இலக்குக்கு ஆளாகும் நாடுகளைச் சின்னாபின்னமாக்குகின்றனர், எல்லா வயது

தொடர்ச்சி 9ம் பக்கம்

# மத்திய பட்ஜெட்: மக்கள் பிரச்சினை எதையும் கண்டுகொள்ளாத ஆளும் பாஜகவின் தேர்தல் பிரச்சாரத்திற்காகத் தயாரிக்கப்பட்ட அறிக்கை

*மத்திய நிதி அமைச்சர் 2018–19 பட்ஜெட்டை சமர்பித்து ஆற்றிய உரை குறித்து தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) பொதுச் செயலாளர் பிப்ரவரி 1, 2018 அன்று வெளியிட்ட அறிக்கை:*

மக்களின் வாழ்வு குறித்த, அடிப்படை பொருளாதார விஷயங்கள் குறித்த அரசாங்க கொள்கையின் அறிக்கையாகவே மத்திய பட்ஜெட் இருக்கவேண்டும்.

பெருகிவரும் வேலையின்மை, அச்சமூட்டும் விலைவாசி உயர்வு, ஒன்றன்பின் ஒன்றாக ஆலைமூடல், அதிகரிக்கும் வேலையிழப்பு, ஊதிய வீழ்ச்சி, அதிகரித்துவரும் ஒப்பந்த–அன்றாட கூலிமுறை, விவசாய உற்பத்திக்கான குறைந்தபட்ச கூலி வழங்காமல் ஏழை விவசாயிகளை கைவிடுவது, தொழிலாளர்களின் இடப்பெயர்ச்சி அதிகரித்துவருவது, விவசாயிகள் வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களின் தற்கொலை, விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய பெரும் பணக்காரர்களுக்கும் கோடிக்கணக்கான நிராதரவான மக்களுக்குமிடையில் பெரும் அவலமான இடைவெளி, ஆக்கப்பூர்வமான முதலீடுகள் அதலபாதாளத்தில் வீழ்வது, குறைந்தபட்ச சுகாதாரம், கல்வி பெரும் வாய்ப்பு இல்லாது போதல், ஒருசில தொழிற்குழுமங்கள் கடனைத் திருப்பிக் கட்டாமல் வங்கி நிதியை தயவு தாட்சண்யமின்றி மோசடி செய்தல், கருப்புப் பணத்தின் ஆதிக்கம், எங்கும் எதிலும் ஊழல் மற்றும் பலவற்றால் மக்கள் வாழ்வு பாழாகி வருகிறது. இவற்றின் தீர்வு ஒருபுறமிருக்க இதுபற்றி பட்ஜெட்டில் ஒரு வார்த்தைக்கூட இல்லை.

மாறாக, நிதியமைச்சரின் உரையில் பொருளாதார நிலைகுறித்த ஒவ்வொரு அம்சமும் நன்றாக இருப்பதாகவும் மிகுந்த வளர்ச்சி வாய்ப்பு கொண்டு பிரகாசமாகவும் அனைவருக்கும் பலனளிக்கவும் செய்யும் என்றும் காண்பிக்கப்பட்டது.

நாட்டு மக்கள் அனைவரும் அறிந்ததுபோல் ஏழை விவசாயிகள், தினக்கூலிகள் தெருவோர வியாபாரிகள், சிறுவியாபாரிகள் மற்றும் கடை உரிமையாளர்களின் வாழ்வில் பீதியூட்டிய நூற்றுக்கணக்கானோரை கொன்றுகுவித்த பணமதிப்பு நீக்க நடவடிக்கையை நிதியமைச்சர் நேர்மையின் முத்திரையாக மக்கள் வரவேற்றதாக புழுகினார். அதேபோன்று, சிறு மற்றும் நடுத்தர தொழில்களையும் பொதுமக்களையும் கடுமையாக பாதித்த சரக்கு மற்றும் சேவை வரி வரிவிதிப்புக் கொள்கையில் சீர்திருத்தத்தை உருவாக்கி மக்களுக்கு நல்ல விளைவுகளை ஏற்படுத்தியது என விளக்கப்பட்டது.

இவ்வாறு பாஜக மந்திரிகளும் எம் பிக்களும் மேஜையை தொடர்ந்து தட்டியதற்கு நடுவே 2018–19 பட்ஜெட் உரையை நிதியமைச்சர் வாசித்தது அவரது கட்சி மற்றும் அரசாங்கத்தின் தேர்தலுக்கான பிரச்சார அறிக்கையாகவே அமைந்தது. அவை ஏதோ நாட்டு மக்களின் நலனுக்காக கொண்டு வந்ததுபோல் காண்பிக்கப்பட்டது. இத்திட்டங்கள் யாவும் பெரும் வெற்றியடைந்தது போலவும் பல்வேறு திட்டங்களாகவும் காண்பிக்கப்பட்டு ஒவ்வொன்றும் பிரதம மந்திரி பெயருடன் இணைத்து அழைக்கப்பட்டது.

ஒட்டுமொத்த பட்ஜெட்டும் வக்கிரத்தனமாக பெரும் பணக்காரர்கள், கார்ப்பொரேட்டுகளுக் கானதாகவும் மேலும் துன்பத்தையும் கேடுகளையுமே உழைக்கும் மக்களுக்குக் கொணரக்கூடிய மக்களுக்கு விரோத மானதாகவுமே இருக்கிறது. இவ்வாறு, மிகவும் பீற்றிக்கொள்ளப்பட்ட 'டிஜிட்டல் பொருளாதார'த்தில் பகாசுர பணக் காரர்களும் ஆளும் ஏகபோகவாதிகளும் பெரும் லாபத்தை அள்ளி வாரிக்கொள்ளும் அதே வேளையில் போலி வாக்குறுதிகளால் நாட்டு மக்களை ஏமாற்றுவதன்மூலம் தாங்கள்தான் 'நேர்மையின் சின்னம்' என தங்களைத்தாங்களே வெட்கமின்றி மார்தட்டிக்கொள்ளும் ஒரு அரசாங்கமாகவும் இருக்கிறது.

நாட்டின் ஆண்டு பட்ஜெட் என்ற பெயரிலான இந்த ஏமாற்று ஆவணத்திற்கெதிராக நாட்டு மக்கள் பொங்கி எழுமாறு நாம் அறைகூவல் விடுக்கிறோம் ■

# நீரவ் மோடியும் அவரது கூட்டாளிகளும் பஞ்சாப் நேஷனல் வங்கியில் செய்த மோசடி மக்கள் மீதான கொலைபாதக பொருளாதார தாக்குதலாகும்

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் 17.02.2018 அன்று வெளியிட்ட அறிக்கை:*

அரசு நிறுவனமான பஞ்சாப் நேஷனல் வங்கி (PNB)யானது ஆளும் பாஜகவிற்கு நெருக்கமானவர் எனக் கூறப்படும் நீரவ் மோடி எனும் வைர, ஆபரண வியாபாரியால் ஊழல் வங்கி அதிகாரிகள், அரசாங்க நிர்வாகம், ஆளும் கட்சியின் உயர்மட்டத் தலைவர்களின் உடந்தையுடன் அப்பட்டமாக ரூபாய் 11,300 கோடியளவில் ஏமாற்றப்பட்டிருக்கும் விதம் முதலாளித்துவ இந்தியாவில் நிதிசார்ந்த குற்றம், ஊழல் மற்றும் மக்கள் மீதான பொருளாதாரத் தாக்குதல் எந்த அளவிற்கு அதிகரித்திருக்கிறது என்பதை வெளிப்படுத்தியிருக்கிறது.

நன்னம்பிக்கையின் அடிப்படையில் வங்கிகளில் டெபாசிட் செய்யப்பட்ட பாடுபட்டு ஈட்டிய மக்கள் பணத்தை சூறையாடுவதற்கு ஆளும் முதலாளித்துவத்தின் அரசியல் ஏஜெண்டுகள் எப்படி உடந்தையாயிருக்கிறார்கள் என்பதும், தண்டனை ஏதுமின்றி குற்றவாளிகள் தப்பிச் செல்ல அனுமதிப்பதும் இழப்பை சரிசெய்ய வங்கிகளுக்கு உதவுகிறோம் எனும்பெயரில் அரசு கஜானாவிலிருந்து மக்கள் பணம் பல கோடிகளை ஊழல்புரிந்த இவ்வங்கிகளுக்கு அளிப்பதும் மீண்டுமொருமுறை வெளிப்பட்டிருக்கிறது.

இத்தகைய கீழ்த்தரமான செயல்கள் தொடர்ந்து நடந்திட அனுமதிக்கப்பட்டால், ஆட்சியதிகாரத்துடன் ஒட்டி உறவாடிக்கொண்டிருக்கும் பழிபாவங்களுக்கு அஞ்சாத வணிகர்கள், தொழிலதிபர்களால் மக்கள் பணம் இதுபோன்று பகல் கொள்ளையடிக்கப்படுவதும், பாடுபடும் வெகுஜனங்களைப் பலிகடாவாக்கி அவர்கள் வாழ்வின் அடிப்படைப் பாதுகாப்பை முழுவதுமாகத் தட்டிப்பறிப்பதும் மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டுதானிருக்கும் என்பது தெளிவு.

எனவே, துயரத்திற்கு ஆட்பட்டிருக்கும் மக்கள் கிளர்ந்து ஒன்றிணைந்து கடுமையான எதிர்ப்பைக் காட்டுவதுடன், ஒரு சக்திவாய்ந்த தீவிரப் போராட்டத்தைக் கட்டியெழுப்பினால் மட்டுமே, இது போன்ற மகாமோசடிகளும் ஏமாற்றுத் தனங்களும் மீண்டும் மீண்டும் நடைபெறுவதைத் தடுத்து நிறுத்தமுடியும் ■

# உலகை உலுக்கும் கேள்விகள் . . .

8ம் பக்கத் தொடர்ச்சி

அப்பாவி மக்களையும் ஆயிரக்கணக்கில் எதிர் காலமில்லா தரித்திரத்திற்குள் தள்ளி, அகதிகளாக இவ்வுலகில் அலையவிடுகின்றனர். அதன் பின்னர் சில ஐரோப்பிய நாட்டு ஆட்சியாளர்கள் தங்களை அகதிகளின் பாதுகாவலர்களாகக் காட்டிக்கொண்டு கடுமையான தேக்கநிலையிலும் சந்தை நெருக்கடியிலும் உள்ள இந்த நேரத்தில் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காக அந்த அகதிகளை மலிவான தொழிலாளர்களாகப் பயன் படுத்துகின்றனர். மேலே குறிப்பிட்ட வேறு சில ஐரோப்பிய நாடுகளில், தேசிய இன வெறி, குறுகிய தேசியவாத உணர்வு போன்றவற்றை அங்குள்ள வலதுசாரி பிற்போக்குவாதிகள் அங்குள்ள மக்களிடம் தூண்டிவிட்டு ஏற்கனவே கடுமையான முதலாளித்துவ சுரண்டலால் முதுகொடிந்திருக்கும் அவர்களை அகதிகளுக்கு எதிராக மூர்க்கத்தனமாக நிற்கச் செய்கின்றனர்.

எல்லாவற்றையும் சேர்த்துப்பார்த்தால், முதலாளித்துவ ஏகாதிபத்தியவாத ஆட்சியாளர் களின் அனைத்து முயற்சிகளுக்குப் பின்னரும் நெருக்கடியில் சிக்குண்டிருக்கும் முதலாளித்துவ அமைப்பு திக்குத் தெரியாமல் ஒவ்வொரு முயற்சியாக எடுத்துக்கொண்டிருக்கின்றது. சில இடங்களில், பிரிந்து நிற்கவேண்டும் என்ற தனது முயற்சி தோல்வியடையும் போது முதலாளித்துவம் ஒன்றுபட்டிருக்க முயற்சிக்கிறது; ஓரிடத்தில் அகதிகளை வரவேற்கிறது, மற்றொரு இடத்தில் ஒரு அகதியைக் கூட விடமாட்டோம் என்று கடுமையாக எதிர்க்கிறது. ஒரு கட்டத்தில் ஜனநாயகத்திற்கு அனைவரையும் அரவணைத்துச் செல்லவேண்டும் என்று பேசுகிறது, ஆனால் யதார்த்தத்தில் தேசிய அளவில் தனியாக இருக்கவேண்டும் என்று வெறிபிடித்து கத்துகிறது. என்ன நடவடிக்கை எடுத்தாலும் முதலாளித் துவத்தின் பொருளாதார நெருக்கடி தீராது. வேகமாக, அபாயகரமான நிலைக்குச் சென்று கொண்டிருக்கும் அதன் வேதனைகளை பொது மக்கள்தான் தாங்கிவருகின்றனர்.

இந்தப் பின்னணியில் ஏகாதிபத்திய திட்டத்தின் தன்மையை ஐரோப்பிய மக்கள் உன்னிப்பாகப் பார்க்கவேண்டும். கடுமையான நெருக்கடியில் சிக்குண்டிருக்கும் முதலாளித்துவ ஏகாதிபத்திய உலகின் கோர முகத்தின் பல்வேறு வெளிப்பாடு கள் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. முதலாளித்துவம் ஏகாதிபத்தியம் ஆட்சியிலிருக்கும் வரை நெருக்கடியும் அதோடு தொடர்புடைய தீமைகளும் தொடர்ந்து இருக்கவே செய்யும். மாறாக அது மேலும் மோசமான வடிவத்தையே எட்டும். ஒவ்வொரு நாட்டிலும் முதலாளித் துவத்தைத் தூக்கியெறிந்தால் மட்டுமே தங்கள் முடிவிலா துன்பங்களிலிருந்து மக்களால் வெளியே வர முடியும். உலகின் உழைக்கும் மக்கள் யாவரும் இந்த சுரண்டல் ஒடுக்குமுறை அமைப்பைத் தூக்கியெறிவதற்கான தங்களது பீடுநடையில் தங்களது ஐரோப்பிய சகோதரர்களும் இணையவேண்டும் என்று எதிர்ப்பார்ப்போடு காத்திருக்கிறார்கள் ■

## உச்சநீதிமன்றத்தின் நான்கு நீதிபதிகளின் பேட்டி

# நீதித்துறை சீரழிவைத் தடுக்க வலிமையான ஒன்றுபட்ட மக்கள் இயக்கம் தேவை

2ம் பக்கத் தொடர்ச்சி

சுதந்திரமான நடுநிலை அமைப்பாகக் கருதப்பட்டது. ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக்கட்டத்தில் சமுதாயத்தின் மேற்கட்டுமானமாக இருக்கும் அரசு என்பது ஒரு குறிப்பிட்ட சட்டம் ஒழுங்கு, நிர்வாகம் மற்றும் நீதிக் கோட்பாடுகள், அடிப்படை உரிமைகள் இன்னும் இதுபோன்ற சமூகத்தின் பல அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு பிரதானமாக ஆள்வோரின், ஆளும் வர்க்கத்தின் நலன்களுக்கு சேவைபுரிவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பே ஆகும்.

மனிதகுல நாகரிக வரலாற்றில் பூர்ஷ்வா அரசுகள் என்பது மன்னர்களுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் எதிரான பூர்ஷ்வா ஜனநாயக புரட்சிகளின் மூலமாக அமைக்கப்பட்டவையாகும். தங்களுக்கென்று ஒரு தேசிய அரசுகளை உருவாக்கிய முதலாளித்துவவாதிகள் மனிதநேயம், ஜனநாயகம், தனிநபர் சுதந்திரம், நாட்டின் சட்டத்தின் முன்பு அனைவரும் சமம், அதோடு நவீன நீதி பரிபாலனமுறை போன்ற இன்னும் பல கோட்பாடுகளை உருவாக்கினர். இவை எல்லாவற்றையும் செயல்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் அரசின் மூன்று தூண்களாக அல்லது அங்கங்களாக சட்டமியற்றும் மன்றம்–நிர்வாகம்–நீதித்துறை ஆகியவற்றை உருவாக்கினர், அதோடு நடைபெற்றுவரும் வளர்ச்சிப்போக்குகளை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக பேச்சு, கருத்து சுதந்திரத்தோடு ஊடகத்தை அல்லது பத்திரிகைகளை அரசின் நான்காவது தூணாக உருவாக்கினர். பூர்ஷ்வா ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு ஏற்றவாறு இந்த அங்கங்களுக்கு 'தனித்தனியான அதிகாரங்கள்' என்ற கருத்தியலின் அடிப்படையில் ஒப்பீட்டளவிலான சுதந்திரத்தின் அடிப்படையில் ஒவ்வொன்றுக்கும் குறிப்பிட்ட பொறுப்புகள் வகுத்தளிக்கப்பட்டன. சட்ட மியற்றும் மன்றங்கள், சட்டங்களை இயற்றின, அந்த சட்டங்களை அல்லது விதிகளை நிர்வாகம் அல்லது அதிகாரவர்க்கம் நடைமுறைப்படுத்தியது, நிறைவேற்றப்படும் சட்டங்கள் சட்ட வரம்பிற்குட்பட்டு அரசியலமைப்பு சாசனத்தைப் பின்பற்றி உருவாக்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்து பாதுகாக்கும் அமைப்பாக நீதித்துறை விளங்கியது. ஆக இந்த அங்கங்களுக்கு வழிகாட்டுவதற்காக 'ஒப்பீட்டளவிலான சுதந்திரமும்' 'சரிபார்த்து திருத்தும்' முறையும் வகுக்கப்பட்டன. ஏதாவது ஒரு அங்கத்திற்குள் அதிகாரம் குவிந்துவிடக் கூடாது என்பதற்காகவும் ஒன்றன் செயல்பாட்டில் மற்றொன்றின் தலையீடோ அல்லது ஒத்திசைவின்மையோ இருக்கக்கூடாது என்பதற்காகவும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அதோடு கூடவே ஜனநாயகபூர்வ மனிதநேய விழுமியங்களை உயர்த்திப்பிடிப்பதற்காக நல்ல திறமை வாய்ந்த நம்பகத்தன்மைவாய்ந்த உயர்ந்த மனிதர்களை நீதி வழங்குவதற்கு பொறுப்பானவர்களாக நியமிக்கவேண்டும் என்று கருதப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. நீதியையும் உண்மையையும் உயர்த்திப்பிடித்த நீதித்துறைக்கு மற்ற அங்கங்களைப் போலவே ஏன் அவற்றிற்கெல்லாம் மேலாகவும்கூட மக்களிடம் மரியாதையும் நம்பிக்கையும் கிடைத்தது.

### தற்போதைய அழுகிப்போன முதலாளித்துவம் நீதித்துறையையும் விட்டுவைக்கவில்லை

ஆனால் சுரண்டல் அடிப்படையிலான முதலாளித்துவம் ஏகபோகத்தை ஈன்றெடுத்து பின்னர் ஏகாதிபத்தியத்தை அடைந்தவுடன் தற்போது முற்றிலும் அழுகிப்போன உலக அமைப்பாக மாறிவிட்டது. உக்கிரமான ஒட்டுமொத்த நெருக்கடி, அழுகிய நிலை, சீரழிவு போன்றவை அனைத்து முதலாளித்துவ நாடுகளிலுமுள்ள அனைத்து வாழ்க்கைக் களங்களையும் கவ்வியுள்ளது. ஒரு காலத்தில் நாகரிக உலகத்தால் வெறுக்கப்பட்ட கலாச்சார சீரழிவு ஒழுக்க நெறிச் சீரழிவு, விழுமியங்கள் இன்மை, ஊழல், பித்தலாட்டம் இன்னும் இதுபோன்ற இழிவான கெட்ட குணங்கள் ஆகியவை இன்று அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன. பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் காரல் மார்க்ஸ் 1848லேயே கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் தெரிவித்தபடி, முதலாளித்து சமுதாயத்தில் அனைத்தையும்விட பணமே முக்கியமாகக் கருதப்படுகிறது. பணத்திற்கான பேராசை வெறியும், அதனைக் கொண்டு அதிகாரவெறியும் தான் முதலாளித்துவ சமுதாயத்தில் வாழ்க்கையின் அனைத்துக் களங்களிலும் மனித உறவுகளிலும் உந்து சக்தியாகிவிட்டது. இன்று சூழ்நிலை மிகவும் மோசமடைந்துவிட்டது. மற்ற களங்களில் இருப்பதைப் போன்றே நீதித்துறையிலும் பணமும் அதிகாரமும் புகுந்துவிட்டதோடு நீதிமன்ற செயல்பாடுகளிலும் தாக்கம் செலுத்துகிறது. சமுதாயத்தில் பணம் படைத்தவர்களின் சலுகை உரிமையாக மாறிவிட்டதோடு மட்டுமல்லாமல் இது மக்களுக்கு நீதிவழங்குவதிலும் உண்மையை கொண்டு செல்வதிலும் தரம் குறைந்து நம்பகத்தன்மையையும் இழந்துவிட்டது. முதலாளித்துவம் மேலும் மேலும் அழுகல் நிலையை அடையும்போது நீதித்துறைக்குள்ளும் நிலைமை மிகவும் அவலமாகிவருகிறது. ஏகபோக முதலாளித்துவம் வளர்ந்தவுடன், பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியின் மூலம் உருவாக்கப்பட்ட சட்டமியற்றும் மன்றங்கள், நிர்வாகம், நீதித்துறைகளுக்கிடையில் அதிகாரப் பகிர்வு ஒப்பீட்டளவிலான சுதந்திரம் ஆகியவையும் காணாமல் போய்விட்டன. இன்று, இந்த கோட்பாடுகளை மக்களின் மனதிலிருந்து முற்றிலும் ஒழிப்பதற்கு ஏகபோகங்கள் முயற்சிப்பதோடு தங்களது ஒட்டுமொத்த நலன்களுக்கு சேவை செய்யும் அடிவருடி அமைப்பாக ஒட்டுமொத்த நீதித்துறை அமைப்பையும் மாற்றுவதற்கு கடுமையான முயற்சிகளை மேற்கொள்கின்றனர். மரணப்படுக்கையில் முதலாளித்துவம் இருக்கும் இந்த காலகட்டத்தில் தங்களது அரசாங்கம் உள்ளிட்ட அரசு இயந்திரத்தின் பல்வேறு அங்கங்களின் மூலமாக அனைத்து அதிகாரங்களையும் தங்களது கைவசம் குவிப்பதற்கு ஏகபோகங்கள் தீவிரமாக எத்தனிக்கின்றனர்.

முதலாளித்துவத்தின் அழுகிய காலகட்டத்தில் தான் இந்திய முதலாளித்துவமும் இந்திய முதலாளித்துவ அரசும் உருவாகி, வளர்ந்து ஸ்திரமானது. ஏகபோக முதலாளிகள் கோலோச்சிய நேரத்தில் புதிய சுதந்திர இந்திய முதலாளித்துவ அரசு உருவெடுத்தது. எனவே உருவானது முதலே இந்திய முதலாளித்துவ அரசு அவற்றின் நெருக்கடிகளின் சுவடுகளையும் அவற்றிற்குள்ளேயே இருக்கும் பலவீனங்களுடனேயே செயல்பட்டது. உலகம் முழுவதும் நெருக்கடி உக்கிரமடைந்தவுடன் அது இந்திய முதலாளித்துவ அரசை மேலும் பாதித்தது. அழுகல், சீரழிவின் ஆயிரத்தோரு தீமைகளும் பிறழ்வுகளும் எங்கும் எல்லாவற்றிலும் வியாபித்திருக்கின்றன. எனவேதான் அனைத்து தேசிய, பிராந்திய பிரதான முதலாளித்துவ கட்சிகளின் தலைவர்களும் ஊழலில் சீரழிவில் திளைப்பதை ஊடகங்கள் வாயிலாகவும் தங்கள் சொந்த அனுபவங்களின் மூலமும் பொதுமக்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் தெரிந்து கொண்டு வருகின்றனர். ஆனாலும்கூட ஆளும் ஏகபோகங்களுக்காக செயல்படும் இந்த அமைப்பு இருக்கும் வரையில் இதை அனுபவித்தே ஆகவேண்டும். ஒருகாலத்தில் போற்றப்பட்ட நிர்வாக நடுநிலைமை என்ற கோட்பாட்டை மறந்துவிட்டு பாரபட்சம், ஊழல், லஞ்சம் ஆகியவற்றில் அதிகாரவர்க்கம் திளைக்கின்றது. ஆனால் ஆளும் வர்க்கத்தின் அடிமை தூணாக செயல்படுவதற்கு இது தடையேதும் விதிக்கவில்லை!

முன்னணி ஏகபோகங்களும் தொழிலதிபர்களும் ஊழல், சட்ட விரோத பரிவர்த்தனை, வரி ஏய்ப்பு போன்றவற்றிற்காக அவ்வப்போது தலைப்புச் செய்திகளில் இடம்பிடிக்கின்றனர். வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காததால் இந்திய வங்கிகளின் வாராக் கடன்களில் பெரும்பகுதியை ஏகபோகங்களும் அவர்களது அடிவருடிகளும் கடனாகபெற்றுள்ளது எந்த அளவு ஊழல் புரையோடியுள்ளதென்பதையே காட்டுகிறது. ஆனால் இவை எல்லாம் மேடை காட்சிகளோடு நிறைவுபெற்று மூடி மறைக்கப்பட்டு விடுகின்றன. ஏராளமான பணம் செலுத்திப் பெறப்படும் ராணுவ ஒப்பந்தங்களிலும் மோசடி நடைபெறுவதால் இதற்கு ராணுவமும் தப்ப வில்லை. இந்தப் பிரச்சினைகள் எல்லாம் அவ்வப்போது அம்பலமானாலும் உடனடியாக மூடி மறைக்கப்படுகிறது.

### மக்கள் கருத்தும் போராட்டமும் மட்டுமே இந்த சீரழிவுக்கு தடையாக இருக்க முடியும்

இத்தகைய எங்கும் வியாபித்திருக்கும் அவலமான விரக்தியளிக்கும் சூழ்நிலையில் ஏகபோகங்களின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களால் நடத்தப்படும் பிரச்சாரத்தால் சட்டத்தின் ஆட்சி புனிதமானது என்ற கருத்திற்கு மக்கள் எளிதாகப் பலியாகிவிடக்கூடும். இதனால் நீதித்துறையின் மீது நம்பிக்கையை வளர்த்து இறுதியில் அரசின்மீதே மக்களுக்கு நம்பிக்கை வந்துவிடும். ஆனாலும்கூட அழுகிப்போன அமைப்பின் அங்கமாக இருப்பதால் நீதித்துறை இதற்கு விதிவிலக்கு ஆகமுடியாது. மேலே விளக்கப்பட்டபடி, அழுகல், பண புழக்கம், அரசியல் தலையீடு, நடுநிலைமையை அழிக்கும் தாக்கம் ஆகியவற்றால் நீதித்துறை பீடிக்கப்பட்டு அதன் தரம் வீழ்ந்து, நீதி வழங்கவேண்டிய நபர்களின் நம்பகத்தன்மையும் சீரழிந்துவிட்டது. இது சமீபத்திய நான்கு உச்சநீதிமன்ற நீதிபதிகளின் பேட்டியிலிருந்து மீண்டும் தெரியவருகிறது.

இத்தகைய சூழ்நிலையில் தங்களது குழப்பதை உதறிவிட்டு, செயல்படா நிலையிலிருந்து விடுபட்டு மக்களின் கருத்தும் அதன்மூலம் உருவாகும் அழுத்தமும் மட்டுமே இந்த சீரழிவைத் தடுப்பதற்கு உதவும் என்பதை மக்கள் உணரவேண்டும். நீதித்துறையின் சுதந்திரத்தை, நடுநிலைமையை, பாரபட்சமின்மையை மீண்டும் கொண்டுவர வேண்டும் காக்க வேண்டும், நீதி வழங்குவதில் பணத்தின் தலையீட்டைத் தடுக்கவேண்டும் என்ற கோரிக்கைகளுக்காகவும் நீதித்துறையை தனது அதிகாரப் பிடிக்குள் கொண்டுவரவேண்டும் என்ற முதலாளித்துவ அரசாங்கத்தின் முயற்சியை முறியடிப்பதற்கும் சக்திவாய்ந்த மக்கள் இயக்கம் நாடுமுழுவதும் வளர்த்தெடுக்க வேண்டும். கூடவே ஏழை, எளிய நடுத்தர மக்கள் குறைந்த செலவில் நீதி பெறுவதற்காக, தேவைபட்டால் தேவையான நிதி உதவியையும் வழங்குவது உள்ளிட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையையும் எழுப்ப வேண்டும். வலுவான ஒன்றுபட மக்கள் இயக்கம் மட்டுமே நீதித்துறையில் தவறிழைப்பவர்கள், முறைகேட்டில் ஈடுபடும் கும்பல்கள்மீது அழுத்தத்தை ஏற்படுத்தி இந்த அழுகிப்போன முதலாளித்துவ அமைப்பிற்குள்ளேயே ஓரளவுக்கேனும் நீதித்துறையில் நடுநிலைமை, பாரபட்சமின்மையை காப்பதும் உத்திரவாதப்படுத்துவதும் சாத்தியப்படும் ■


### DECLARATION

Statement about ownership and other particulars about the newspaper **PAATTALI CHINTANAI** to be published in the first issue after last of February

**FORM IV (SEE RULE 8)**

Place of Publication : New No 16, Old No 18,Rotler Street Choolai, Chennai 600 112

Periodicity of its Publication : Monthly

Printer's Name : V P Nandakumar

Nationality : Indian

Address : New No 16, Old No 18, Rotler Street Choolai, Chennai 600 112

Publisher's Name : V P Nandakumar

Nationality : Indian

Address : New No 16, Old No 18, Rotler Street Choolai, Chennai 600 112

Editor's Name : V P Nandakumar

Nationality : Indian

Address : New No 16, Old No 18, Rotler Street Choolai, Chennai 600 112

Name and address of Individuals who own the newspaper and partners of shareholders holding more than one percent of the total capital.

**SOCIALIST UNITY CENTRE OF INDIA (COMMUNIST)**
**TAMILNADU STATE ORGANISING COMMITTEE**

I, V P Nandakumar, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

March 1, 2018 **V P Nandakumar**
Signature of Publisher

# சக்திவாய்ந்த, போர்க்குணமிக்க, பாட்டாளி வர்க்க ஜனநாயக இயக்கங்களை, வளர்த்தெடுக்க, இடதுசாரி ஒற்றுமையை பலப்படுத்துவோம்

## சிபிஐ (எம்) மாநில மாநாட்டில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மாநிலச் செயலாளர் அறைகூவல்

*தூத்துக்குடியில் பிப்ரவரி 17-20வரை நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) இன் 22வது மாநில மாநாட்டில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் A ரெங்கசாமி கலந்துக்கொண்டு வாழ்த்துரையாற்றினார். அவ்வுரையை கீழே தருகிறோம்.*



**சிபிஐ (எம்) மாநாட்டில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் A ரெங்கசாமி உரையாற்றுகிறார்**

தோழர்களே,

அனைவருக்கும் எனது புரட்சிகரமான வாழ்த்துக்களை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது நாடு மிகக் கடுமையானதொரு தருணத்தில் இருக்கையில் உங்களது கட்சி மாநில மாநாடு நடைபெறுகிறது. இம்மாநாட்டில் எடுக்கும் முடிவுகள் இடதுசாரி கூட்டு இயக்கத்தை வலுப்படுத்தும் வகையில் இருக்கும் என நம்புகிறேன்.

உலக முதலாளித்துவம்–ஏகாதிபத்தியம் ஆழ்ந்த நெருக்கடியில் சிக்கியிருக்கிறது. மாமனிதர் லெனின் நீண்ட நாட்களுக்கு முன்பே சுட்டிக் காட்டியதைப் போல முதலாளித்துவமானது ஏகபோகம் ஏகாதிபத்தியம் என்ற கட்டத்தை அடைந்து மரணத்தருவாயில் உள்ளது. அதன் ஆயுட்காலத்தை நீடிப்பதற்காக ஆளும் அரசாங்கங்கள் மக்கள் விரோதக் கொள்கைகளை அமல்படுத்திவருகின்றன.

ஆனால் சோகம் என்னவென்றால் முதலாளித் துவம்–ஏகாதிபத்தியத்திற்கு சவக்குழி தோண்ட வேண்டியவர்கள் அதாவது உலக புரட்சிகர பாட்டாளிகள் சவக்குழி தோண்டுவதற்கு தயாராக இல்லை. தனிமனித துதியை எதிர்த்து போரிடு வதாக சொல்லிக்கொண்டு மாமனிதர் ஸ்டாலினை திருத்தல்வாதிகள் பகிரங்கமாக கண்டனம் செய்த தாலும் இதன் வாயிலாக உண்மையில் லெனினி சத்தின் அத்தாரிட்டியையே உதறித் தள்ளியதாலும் மாபெரும் உலக சோசலிச அமைப்பு வருத்தத்திற் குரிய வகையில் சிதைவுற்றது. இவ்வாறாக எதிர்ப் புரட்சிக்கான களம் தயாரிக்கப்பட்டது.

ஆயினும் நம்பிக்கைக்கும் இடமிருக்கிறது. உலகம் முழுவதும் அங்கொன்றும் இங்கொன்றுமாக மக்கள் போராட்டம் வெடித்தெழுகிறது. இப் போராட்டங்கள் தலைமை வேண்டிகோருகின்றன. இப்போதோ எப்போதோ மார்க்சிசம்–லெனினிசத்தின் சரியான புரட்சிகர புரிதலோடு உலகம் முழுவதும் புரட்சிகர இயக்கங்கள் வெடித்தெழும் என நம்புகிறோம். உலக முதலாளித்துவ ஏகாதிபத்தியத்துக்கு சவக்குழி தோண்டுவதற்கு பாட்டாளி வர்க்கத்தின் தலைமை மீண்டும் உருவெடுக்கும் என நம்புகிறோம்.

நமது நாட்டில் ஏகபோக நிறுவனங்கள் பன்னாட்டு கம்பெனிகள் ஒட்டுமொத்த முதலாளித்துவ வர்க்கம் ஆகியன தங்களது ஈவிரக்கமற்ற சுரண்டலை தொடர்வதற்கும் மேலும் தீவிரப்படுத்துவதற்கும் மறுபுறத்தில் பாசிசமயமாக்கும் போக்கை முடுக்கிவிடுவதற்கும் செயற்கையாக ஊதிப் பெருக்கிக்காட்டி பாஜகவை ஆட்சியில் அமர்த்தியுன. பாசிசமயம் என்பது இன்று நம் நாட்டில் வேகமாக வளர்ந்துவருகிறது.

நம் நாட்டில் ஏற்கனவே ஏகபோகம் என்ற வடிவில் மூலதனம் அடர்த்தியாக குவிக்கப் பட்டுள்ளது, அரசு அதிகாரம் மையப்படுத்தப் பட்டுள்ளது. இவ்வாறாக ஏற்கனவே நிர்வாக பாசிசம் நிலவிவருகிறது. மேலும் காலாவதியாகி விட்ட கிழடுதட்டிப்போன மதக்கருத்துக்கள், மூடநம்பிக்கைகள், பழமைவாத சிந்தனைகள் தூபம் போடப்பட்டு ஊக்கப்படுத்தப் படுகின்றன. இவ்வாறாக சித்தாந்த கலாச்சாரத் துறைகளில் கடுமையான தாக்குதல் நடத்தப்படுகிறது. நவீன அறிவியல் கண்டுபிடித்த பல அரிய கண்டு பிடிப்புகள் ஏற்கனவே பண்டைய இந்தியா விலேயே கண்டுபிடிக்கப்பட்டதாக கேலிக்கூத்தான வகையில் போலிப்பெருமைகள் தம்பட்டம் அடித்துக்கொள்ளப்படுகின்றன. இந்து மதவெறி யையும் பண்டைய பாரம்பரிய உணர்வுகளையும் வளர்ப்பதற்காகவே இவையெல்லாம் செய்யப் படுகின்றன.

இந்திய மறுமலர்ச்சி உயர்த்திப்பிடித்த மதச்சார் பற்ற ஜனநாயக மதிப்புகள் அனைத்தையும் ஆர்எஸ்எஸ் அழித்து வருகிறது. எனவே கலாச் சாரத் துறையில் ஆன்மீகவாதமும் பழைமை வாதமும் ஊக்கப்படுத்தப்படுவதையும் இவற்றோடு அறிவியலின் அடிப்படை கருத்தியல்களுக்கு மாறாக அறிவியலின் தொழில்நுட்ப அம்சங்கள் மட்டுமே ஊக்கப்படுத்தப்படுவதையும் காண் கிறோம். அறிவியல்பூர்வ கண்ணோட்டம் அறிவியல் மதிப்புகள் அனைத்தும் அழிக்கப்பட்டு வருகின்றன. இது முழுக்க முழுக்க பாசிச தாக்கு தலாகும். இத்தாக்குதலை முறியடிப்பதற்கு சக்திவாய்ந்த சித்தாந்த போராட்டம் அவசியமாகும்.

இடதுசாரிகள் என்பவர் எவர்? தங்களை மார்க்சிஸ்டுகள் என்று கருதிக்கொள்பவர்களே இடதுசாரிகள் என்பது தெளிவு. மார்க்சியத்தைப் பற்றிய புரிதலிலும் அதன் பிரயோகத்திலும் அடிப்படை வேறுபாடுகள் இருப்பினும் தங்களை மார்க்சிஸ்டுகளாக கருதிக்கொள்பவர்களையே இடதுசாரிகள் எனக்கொள்ளவேண்டும். அத்தகை யோருக்கிடையே சித்தாந்த வேறுபாடுகளும் சித்தாந்த போராட்டமும் இருக்கலாம். இவை யெல்லாம் அவர்களுக்கிடையேயான ஒற்றுமையை பலப்படுத்துவதற்கேயன்றி பலவீனப்படுத்துவதற் கல்ல. மேம்பட்ட புரிதலை வளர்ப்பதற்கு சித்தாந்த போராட்டம் அவசியமாகும்.

மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகள் என்பவை எவை? இது குறித்து பெரும் குழப்பம் நிலவுகிறது. பாஜகவை எதிர்ப்பது மட்டுமே ஒரு கட்சியை மதச்சார்பற்ற கட்சியாக்கிவிடாது. தேர்தலில் வெற்றிபெறவேண்டும் என்பதற்காக மட்டுமே பாஜகவை எதிர்க்கிறார்கள். காங்கிரசும் பாஜகவை எதிர்க்கிறது. அதற்காக காங்கிரசை மதச்சார்பற்ற கட்சி என்று கூறிவிட முடியுமா? மேலும் பல பிராந்திய கட்சிகள், ஜாதிய குறுகியவாத கட்சிகள் என பலதரப்பட்ட கட்சிகள் உள்ளன. இவற்றையும் மதச்சார்பற்ற கட்சிகள் என்று கூறமுடியாது.

மதச்சார்பின்மை என்பதற்கு சரித்திரபூர்வமான அர்த்தமொன்று உள்ளது. ஐரோப்பிய மறு மலர்ச்சியின்போது முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின்போது மதச்சார்பின்மை கோட்பாடு உதயமானது. தத்துவார்த்த ரீதியாக மதச்சார் பின்மை என்பது ஆன்மீகசக்தி எதையும் அங்கீகரிக் காமல் இருப்பதும் இயற்கையும் பொருளாதய உலகமும் மட்டுமே யதார்த்தமானதும் உண்மை யானதும் என்று அங்கீகரிப்பதுமே மதச்சார் பின்மை என்பதன் பொருளாகும்.

அரசியல் ரீதியாக மதச்சார்பின்மை என்பதன் பொருள் அரசியல், கல்வி, சமூக விவகாரங்கள் ஆகியன மதத்தோடு எந்த தொடர்பும் கொள்ளா திருத்தல் என்பதாகும். இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தில் மதச்சார்பின்மை என்ற சொல் காணப்படுகிறது. வெறும் வார்த்தையாக மட்டுமே எழுதப்பட்டுள்ளதேயன்றி நடைமுறையில் மதச்சார்பின்மை கடைபிடிக்கப்படவில்லை. அனைத்து மதங்களையும் சமமாக ஊக்குவிப்பது மதச்சார்பின்மை ஆகாது. அரசும் அதன் நடவடிக்கை கள் அனைத்தும் மத அணுகுமுறையிலிருந்து விடுபட்டிருக்கவேண்டும்.

ஜனநாயகக் கட்சிகள் என்பவை எவை? வார்த்தைகளில் மட்டுமின்றி செயலிலும் மதச்சார்பின்மையை கடைபிடித்து ஜாதீயம் குறுகியவாதம், வகுப்புவாதம் ஆகியவற்றை எதிர்த்து ஏகாதிபத்தியத்தை தொடர்ந்து எதிர்த்து இடதுசாரிக்கு தொடர்ந்து ஆதரவளித்து மக்களின் ஜனநாயகக் கோரிக்கைகளை உயர்த்திப்பிடிக்கும் கட்சிகளே ஜனநாயகக் கட்சிகளாகும். இக்கட்சிகள் அதிகாரத்தில் இருக்கும்போதும்கூட ஜனநாயக இயக்கங்களையும் விவசாயிகள் போராட்டங் களையும் தொழிலாளர் போராட்டங்களையும் நசுக்காது.

தேர்தலில் ஆதாயம் தேடவேண்டும் என்பதற் காக அவசரகதியில் கொள்கை கோட்பாடு ஏதுமின்றி கூட்டணிகளுக்கு செல்லக்கூடாது. இடதுசாரி வாதம், மதச்சார்பின்மை, ஜனநாயகம் ஆகியன தெளிவாக வரையறுக்கப்படவேண்டும்.

முதலாவதாக, மதஅடிப்படைவாத அணுகு முறைக்கும் நிலப்பிரபுத்துவ கலாச்சாரத்திற்கும் எதிராக உக்கிரமான தீர்மானகரமான சித்தாந்த போராட்டம் நடத்தப்படவேண்டும். எல்லா பிரச்சினைகளுக்கு மூலகாரணம் முதலாளித்துவமே. எனவே மக்களிடம் முதலாளித்துவ எதிர்ப்பு மனபான்மையை உருவாக்கவேண்டும்.

இரண்டாவதாக, இந்தியா சுதந்திரம் அடைந்த உடனேயே வளர்த்தெடுக்கப்பட்டதைப் போன்று சக்திவாய்ந்த, போர்க்குணமிக்க, பாட்டாளி வர்க்க மற்றும் ஜனநாயக இயக்கங்களை வளர்த் தெடுக்கவேண்டும். அது இந்திய இடதுசாரி இயக்கத்தின் பிரகாசமான காலமாகும். துப்பாக்கி தோட்டாக்களையும் குண்டாந்தடிகளையும் எதிர்கொண்டேனும் அப்போது வளர்த்தெடுத்ததைப் போன்ற வர்க்கப்போராட்டங்களையும் ஜனநாயக இயக்கங்களையும் நாம் வளர்த் தெடுக்கவேண்டும். அப்போதுதான் இழந்த கௌரவத்தையும் நம்பகத்தன்மையையும் மக்களிடமிருந்து இடதுசாரி இயக்கம் மீண்டும் பெறமுடியும் என்று கூறி உரையை முடித்துக்கொள்கிறேன் ■

**இடதுசாரி ஒற்றுமை ஓங்குக!**

**மார்க்சிசம் லெனினிசம் நீடூழி வாழ்க!**

**பாட்டாளி வர்க்க சர்வதேசியம் நீடூழி வாழ்க!**

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : 2nd week of Every Month

புரட்சி சிந்தனை

TN/CCN/429/2018-2020
TN/PMG (CCR)/WPP-373/2018-2020
Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# திரிபுராவில் லெனின் சிலையை தகர்த்த ஆர்எஸ்எஸ்–பாஜகவை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) வன்மையாகக் கண்டிக்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் **06.03.2018** அன்று வெளியிட்ட அறிக்கை:*

திரிபுரா மாநிலத்தில் நடந்த தேர்தலில் பாஜக வெற்றி பெற்ற 48 மணி நேரத்தில், பெலோனியாவில் ஆர்எஸ்எஸ்–பாஜகவைச் சேர்ந்த குண்டர்களால் மாபெரும் லெனினது சிலை தகர்த்தெறியப்பட்டிருக்கும் மிகவும் கோழைத்தனமான செயலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

லெனின் அவர்கள் ஒரு மாபெரும் மார்க்சிய மேதையென்றும், முதல் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் சிற்பியென்றும் உலகம் முழுவதிலும் உள்ள மக்களால் உயரிய ஸ்தானத்தில் வைக்கப்பட்டவராவார். ஆர்எஸ்எஸ்–பாஜகவினர் தாங்கள் சித்தாந்த ரீதியில் திவாலாகிப்போனதால் வேறு வழியின்றி, மக்களை அடிபணிய வைத்திட இத்தகைய வெறிபிடித்த காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதன் மூலம், அவர்கள் ஹிட்லர் ஆட்சி காலத்தில் மூர்க்கத்தனமான அதிரடிப்படையினரை கட்டவிழ்த்துவிட்டு வெறித்தனமாகச் செயல்பட்டு, பலத்தைப் பிரயோகித்து அதிகார போதையில் அனைத்து எதிர்கருத்துக்களையும் அடக்கியதை ஒப்பிடக்கூடிய ஒன்றுதான் தங்களது ஆட்சி என்பதை நிரூபித்திருக்கின்றனர்.

இந்திய மக்களின் பெருமைக்குரிய பாசிச எதிர்ப்புப் பாரம்பரியத்திற்கு எதிரானது மட்டுமல்லாது, மனித நாகரிகத்தின் ஆணிவேரையே அழித்திடும் ஒரு காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையாக இருக்கின்ற இத்தகையதொரு கொடிய செயலுக்கு எதிராக சரியாகச் சிந்திக்கக் கூடிய, ஜனநாயகம் எண்ணம் கொண்ட நாட்டு மக்கள் அனைவரும் தங்களின் எதிர்ப்புக்குரலை காட்டிட வேண்டுமென அறைகூவியழைக்கின்றோம் ■

## லெனின் சிலையை தகர்த்ததைக் கண்டித்து பல்வேறு இடங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள்



கொல்கத்தாவில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மேற்கு வங்க மாநிலச் செயலாளர் தோழர் சுமன் பாசு, நரேந்திர மோடி உருவப் பொம்மைக்கு தீ வைக்கும் காட்சி




தேனியில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் கோஷம் எழுப்புகின்றனர்



மதுரையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) சார்பாக தோழர் வால்டேர் உரையாற்றுகிறார், சிபிஐ (எம்), சிபிஐ, சிபிஐ (எம் எல்), விசிக, திக, காங்கிரஸ், மதிமுக, மமக ஆகியவை கலந்துகொண்டன



சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) சார்பாக தோழர் சந்திரன் உரையாற்றுகிறார், சிபிஐ (எம்), சிபிஐ, சிபிஐ (எம் எல்), விசிக, திக, மமக ஆகியவை கலந்துகொண்டன



சேலத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் கோஷம் எழுப்புகின்றனர், சிபிஐ (எம்), சிபிஐ, சிபிஐ (எம் எல்), காங்கிரஸ், திமுக, விசிக, மதிமுக, திக, மநேஜக, எஸ்டிபிஐ



கரூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தோழர் பாலகிருஷ்ணன் உரையாற்றுகிறார், சிபிஐ (எம்), சிபிஐ, சிபிஐ (எம் எல்), காங்கிரஸ், திமுக, விசிக, திக, மதிமுக, எஸ்டிபிஐ



புதுச்சேரியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தயாரிப்புக் கமிட்டி செயலாளர் தோழர் லெனின் துரை உரையாற்றுகிறார்

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai,Chennai 600 112 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**